பக்கங்கள் 12 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 5 (18.3.94) வெள்ளிக்கிழமை ஓசை 28

## மலேரியா தடுப்பு வாரம் இன்று ஆரம்பமாகிறது

இன்று தொடக்கம் 25ஆம் திகதி வரை மலேரியா தடுப்பு வாரமாகக் கொள்ளப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் பலரும் இணைந்து கிராமிய மட்டத்தில் மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. குறிப்பாக மலேரியா நோயைப் பரப்பும் நுளம்பின் பெருக்கத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# கொழும்பில் சோதனை தீவிரம்

# படைகளுக்கு விசேட அதிகாரம்

## சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

[கொழும்பு]

கொழும்பில் பாதுகாப்பு என்ற பெயரில் மீண்டும் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினரும் பொலிசாரும் தமிழர் மீதான கெடுபிடி நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். வீதிகளில் சந்தேகத்துக்குரிய வாகனங்களை தடுத்து நிறுத்தி பரிசோதனைசெய்யவும், தேவைப்படுபவர்களை கைதுசெய்யவும் தேவையான அதிகாரம் பொலிசாருக்கும் படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் வழங்கியுள்ளது.

கொழும்பிற்குப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ள சக்திகளை தடுக்கவே இவ்வாறான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகம் வாகனசாரதிகளுக்கும் பிரயாணிகளுக்கும் புதிய பல அறிவுறுத்தல்களைவிடுத்துள்ளது.

இரவு நேரங்களில் செல்லும் வாகனங்கள் காவல் தடை நிலையங்களை அண்மித்ததும் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவையாவருமாறு;

காவல் தடை நிலையம் தெரிந்ததும்;

ஃ வேகத்தைக் குறையுங்கள்.

ஃ வாகனத்திற்குள் இருப்போரை இலகுவாக அடையாளம் காணக்கூடியதாக வாகனத்திற்கு மின்வெளிச்சத்தை ஏற்றுங்கள்.

ஃ போகுமாறு சமிக்ஞை கிடைத்ததும் பயணத்தை தொடருங்கள்,

வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞையிட்டால்;

ஃ வாகன முன் விளக்குகளை அணைத்துவிடுங்கள்.

ஃ வாகனத்தினுள் மின்வெளிச்சத்தை ஏற்றுங்கள்.

வாகனத்தை சோதனையிடுவதற்காக பயணிகளை இறங்கச்சொன்னால் இறங்கிவிடுங்கள்- பயணிகள் சோத

(12ஆம் பக்கம் பார்க்க)

## முப்படை அதிகாரிகள் 13 பேருக்கு விருது

சிறிலங்கா முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகளுக்கு சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க 'விசேஷ சேவா விபூஷண' விருதுகளை வழங்கியுள்ளார். முப்படைகளையும் சேர்ந்த 13 அதிகாரிகளுக்கு இவ் விருதுகள் வழங்கப்பட்டன.

இராணுவத்தைச் சேர்ந்த, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, காலஞ்சென்ற லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலரத்ணராஜா, மேஜர் ஜெனரல் ரி. பரணகம, மேஜர் ஜெனரல் சி. ஜே. அபயரட்ண, காலம் சென்ற மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ண ஆகியோருக்கும்,

கடற்படை அதிகாரிகளான காலஞ்சென்ற அட்மிரல் கிளான்சி பர்னாண்டோ, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமரசேகர, காலஞ்சென்ற ரியர் அட்மிரல்

(11ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் என நினைத்து ராணுவ குழுக்கள் மோதல்

### ஒரு கோப்ரல் பலி

(கொழும்பு)

வில்பத்து கற்குளியலவ என்ற இடத்தில் சிறிலங்காப் படையினர் தமக்கிடையே நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இராணுவக் கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டார்.

புலிகள் மீது தாக்குவதாக நினைத்து இரு இராணுவக் குழுக்கள் தமக்கிடையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டனர். இச் சம்பவம் கடந்தவாரம் நடைபெற்றது.

## கட்டடச் சுவர் இடிந்து வகுப்புதொழிலாளிமரணம்

யாழ். புனர்வாழ்வுதிணைக்கள களஞ்சிய சுவர் இடிந்து வீழ்ந்ததில் வகுப்புத் தொழிலாளி ஒருவர் அதனுள் நசியுண்டு மரணமானார். ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. வெலிங்டன் தியேட்டர் சந்தியில் உள்ள மேற்படி களஞ்சியத்தினுள் தமது வேலையில் ஈடுபட்டிருந்த சின்னத்தம்பி சந்தனமுத்து (வயது 40) என்பவரே மரணமானவராவார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் வேலையில் ஈடுபட்டிருந்தவர்களுள் ஒருவரான எஸ். கணபதிப்பிள்ளை என்பவர் காயமடைந்தார்.

முதலில் சுவரின் பாதி இடிந்து வீழ்ந்தபோது அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வெளியே ஓடியதாகவும் உடனேயே மீதிச் சுவரும் இடிந்து விழுந்து விட்டதாகவும் மேலும் தெரியவந்துள்ளது. (சி)

## புதுவருட தினத்தை அடுத்து பிக்குகள் குழு வரும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நல்லெண்ணப் பேச்சுவார்த்தையை நடத்து முகமாக நூறு பிக்குமார்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் புறப்பட இருப்பதாக பௌத்த குருமாரின் யாழ் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து வரும் வண. மாதம்பகே அஸ்ஸஜி தேரோ தெரிவித்துள்ளார்.

இந்த பிக்குமார் கொண்ட குழு ஏப்ரல் மாதம் சிங்கள-தமிழ் புதுவருடத்தை அடுத்து செல்லவிருப்பதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பௌத்த குருமார் குழுவில் தென்னிலங்கையிலுள்ள பிரபல சிரேஷ்ட பௌத்தகுருமார் அடங்குவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

### கெமுனு குலதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஊர்காவற்றுறையில் கிளைமோரில் சிக்கி படையினர் பலர் இறந்த சம்பவம் தீவுப் பகுதியில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இதனை பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனுகுலதுங்கா கூறியுள்ளார்.

ஊர்காவற்றுறையில் வெடித்த கிளைமோர் முன்னர் வைக்கப்பட்டதாகவோ அல்லது புதிதாக வைக்கப்பட்டதாகவோ இருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊர்காவற்றுறையில் சென்ற வியாழனன்று நடந்த குண்டு வெடிப்பில் இரண்டு அதிகாரிகள் உட்பட ஆறு இராணுவத்தினர் கொல்லப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ உயர் அதிகாரிகள் சேவையிலிருந்து ஓய்வு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ மூத்த அதிகாரிகளான பிரிகேடியர்கள் கொப்பின் திலகரட்ண, உபாலி அபயகோன் ஆகிய இருவரும் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்கள்.

இவ்விரு அதிகாரிகளினதும் ஓய்வை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அங்கீகரித்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

## கற்பிட்டிப் பகுதியில் ஏழு மீனவர் பலி

கற்பிட்டிக்கு அருகே விதுமாலிகை குடாவில் புலிகள் நடாத்திய தாக்குதலில் ஏழு பேர் பலியாகியதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மூன்று படகுகள்மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனியில் வெளிநாட்டவர் இருந்த மாடிக்கட்டடத்திற்கு தீவைப்பு

### ஏழுபேர் பலி; பலர் காயம்

(பேர்லின்)

ஜேர்மனியில் வெளிநாட்டவர் தங்கியிருந்த ஐந்து மாடிக்கட்டடம் ஒன்றிற்கு இனம் தெரியாதோர் வைத்த தீயினால் ஏழுபேர் பலியாகினர் பலர்காயமடைந்தனர்.

பெரும்பாலும் வெளிநாட்டவர்கள் தங்கியிருந்த இக் கட்டடத்திற்கு வேண்டுமென்றே தீ வைக்கப்பட்டதாக பொலிசார் கூறுகின்றனர்.

நள்ளிரவில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்த வேளை இவ்வாறு தீ வைக்கப்பட்டது. என்றும் வெளியே ரோந்து சுற்றிக் கொண்டிருந்த பொலிசாரின் வாகனமொன்று நெருப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி உருவப்படம்உள்ளே

தியாகச் சுடர் அன்னை பூபதியின் உருவப்படம் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது பெற்றுக் கொள்ளவும்.

நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்

## மகாதேவா ஜோதிடம்

1994 வருஷப்பலன் பல புது விஷயங்களுடன் வெளி வந்துள்ளது. ஜோதிடரைத் தினசரி காலை முதல் மாலை வரை 140 செல்வர் வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (7780)

## சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு

கோக்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு: ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7784)

## பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன்பிறவுண்(Hy-Line Brown) பேட்டுக் குஞ்சுகள் 2 கிழமைவளர்ச்சியடைந்தபேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (7785)

## பசன் கன்றுகள் விற்பனைக்கு

ரூபா 10/- மட்டுமே. சொற்பளவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD. No- 14, Seenier Lane, Jaffna- (சி-8816)

## என்றும் எமக்கு மரணமில்லை

தாய்நாடு காக்கும் போரில் (1941-1945) பங்குபற்றி உயிர்நீத்த சோவியத் கவிஞர்களின் கவிதைகள் விற்பனையாகிறது. யாழ்- வசந்தம், தமிழ்த்தாய் புத்தகசாலை. (7745)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி சங்கத்தானை கண்டி வீதிக்கருகாமையில் 5 பரப்புக்காணி, சிறிய வீடு, நிறைந்த நன்னீர்க் கிணறு, மலசல கூடம் உண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: நாதன் கல் பார், சங்கத்தானை சாவகச்சேரி. (7763)

## தவறிவிட்டது

க. ஸ்ரீகாந்தன் 02601128 56 என இலக்கமிடப்பட்ட இலங்கை வங்கி காசோலை (DRAFT) யாழ் மாநகரசபை எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ்க் கண்ட விலாசத்தில் கொண்டு வந்து தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ஸ்ரீகாந்தன் இல. 148, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (7776)

## தேவை

நோயாளி தள்ளுகதிரை தேவை. வைத்திருப்பவர்கள் நேரிலோ கடிதமூலமோ உடன் தொடர்பு கொள்ளவும். செ. கின்னராஜா 14/1, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம். (7754)

## தங்கநகைகள் கண்டெடுப்பு

யாழ். இந்து மகளிர் கல்லூரி வளவில் அப்பாடசாலை மாணவிகளால் கண்டெடுக்கப்பட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு தங்க நகைகள் நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் உள்ளன. இவற்றைத் தவறவிட்டவர்கள் தகுந்த அடையாளம் காட்டி நல்லூர் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.''

# வீதி விளக்குகள் விஷமிகளால் சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகர சபையினரால் பொருத்தப்பட்ட வீதிவிளக்குகள் சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு சேதப்படுத்தப்பட்டுவருகிறது இதுவரையில் ஐம்பது வீதமான தெரு விளக்குகள் உடைத்து நொருக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி நகரசபை செயலாளர் திரு.க.சண்முகநாதன் கருத்துத் தெரிவிக்கும்போது, இது பொதுமக்களின்சொத்து இப்பகுதி மக்கள் பயனடைய வேண்டுமென்பதற்காக அவ்வப் பகுதி சனசமூக நிலையங்கள் வர்த்தகர்களின் ஆலோசனைக்கிணங்க பொருத்தப்பட்டது.

இன்றைய நிலையில் பெரும் சிரமமும்செலவின்மத்தியிலும் வீதி விளக்குகளைச் சேதப்படுத்தி பயனற்றதாக்குவது வெறுக்கத்தக்க விடயம். இதனை ஒவ்வொரு பொதுமகனும் தன்னுடைய சொத்தாகக் கருதி பயன்படுத்த வேண்டுமென்று மக்களின் ஆதரவை வேண்டி நிற்கின்றார்.

ஒரு சிலர் தங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களுக்குமுன்னால் தமது பணத்தில் இவ்வீதி விளக்குகளைப் பொருத்தியிருக்கின்றனர். இவர்கள் நாட்டின் நலன் விரும்பிகள்.

வடமராட்சியில் பருத்தித்துறை நகர சபையிலேயே தான் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகவும் இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியவைத்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் செயலாளர் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டார். உடைந்த விளக்குகளுக்குப் பதிலாக மாற்று விளக்குகளைப் பொருத்தியபோதிலும் அதனையும் சேதப்படுத்தி விடுகிறார்கள் என்று கவலையடைந்தார். (யோ)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**சவிரிப்பிள்ளை மரியாம்பிள்ளை**
(உடையார்)

தோற்றம்:
02-10 1912

மறைவு:
16-02-1994

''இன்றேநீஎன்னோடுகூட வான்வீட்டிலிருப்பாய்''
(லூக். 23:43)

82 வருட மனிதவாழ்வில் திருமணப் பொன்விழாக் கண்டு யூபிலி நாளிலேயே விண்ணக வாழ்வில் இணைய இறைவனடிசேர்ந்தனார். இவர்வழியாக இறைவன் பொழிந்த வரங்களுக்கு நன்றிகூறி இறை யேசுவில் உயிர்க்கச் செபிப்போம்.

திருப்பலிகள் 18.3.94
யாழ். புனிதயுவானியார் ஆலயம் காலை 6.00
அரியாலை புனித யூதா ஆலயம் காலை 6.30
சங்கானை புனித சவேரியார் ஆலயம் காலை 6.30

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்;

(7789)

## விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

மனையியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களை ஆசிரியர்களாகநியமிப்பது தொடர்பான விண்ணப்ப கால எல்லை ஏப்ரல் 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவை சபை அறிவித்துள்ளது. இது தொடர்பாக முன்னதாக வெளியான வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்ப இறுதித் திகதி கடந்த 15ஆம் திகதி என வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி நாகலிங்கம் செல்லம்மா**

தோற்றம்: 08-06-1917
மறைவு: 17-02-1994

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

சங்கத்தானை, சாவகச்சேரி. — குடும்பத்தினர்

(7773)

## 1994 பங்குனி, சித்திரை மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள்

பரீட்சார்த்திகளின் நன்மை கருதி கீழே தரப்படுகின்றன-

| | |
|---|---|
| 1. கூட்டுறவுப் பரிசோதகர் நியமனத்திற்கான விசேட பரீட்சை- | 19 - 03 - 1994 |
| 2. கிராம அலுவலர்களது தரம் 1 ற்கான பதவி உயர்வுப் பரீட்சை- | 19 - 03 - 1994 |
| 3. நடுத்தர தொழில் நுட்ப சேவை (எம். எல். ரீ. எஸ்.)ப் பரீட்சை | 02 - 04 - 1994 |
| 4. மக்கள் வங்கி, ஆங்கிலம் / தமிழ் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான பரீட்சை | 02 - 04 - 1994 |
| 5. மக்கள் வங்கி இலிகிதர் பதவிக்கான பரீட்சை- | 03 - 04 - 1994 |

கூட்டுறவுப் பரிசோதகர், கிராம அலுவலர் பதவி உயர்வு பற்றிய பரீட்சைகளுக்கான பிரவேசப் பத்திரங்கள் ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாதோர் பரீட்சை நிலையத்தில் கடமையாற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய பரீட்சைகளுக்கான பிரவேசப் பத்திரங்கள் காலக்கிரமத்தில் கிடைக்கப்பெறும்; இவ்விதம் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் 29 - 03 - 1994 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்
17 - 03 - 1994

க. மாணிக்கவாசகர்
யாழ்ப்பாண அரசாங்க அதிபர்

(கி-8857)

## நினைவு கூருகின்றோம்...

### 1994-03-18

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் முகமூடி நபரால் இனங்காட்டப்பட்ட நிலையில் சிறிலங்காக் காவற்துறையினருடன் ஏற்பட்ட சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**வில்வம்** (முத்துலிங்கம் கருணாநிதி - வன்னியார் வீதி, கல்முனை - 02 - அம்பாறை)

1991 ஆம் ஆண்டு தாவளம் பிட்டியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த

**மேஜர் ராஜித்** (செ. கணேசன்கித்தாண்டி-மட்டு)

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**கவி** (வேலாயுதம் பிரபாகரன் - புன்னை நீராவிபடி, விசுவமடு முல்லைத்தீவு)

மன்னார் சிலாவத்துறை முகாம் தகர்ப்பின் ஆரம்பத்தில் வீரச்சாவெய்திய

**கப்டன் மித்திரன்** (கந்தசாமி சிறீக்குமார் - அம்மன் வீதி, கந்தர்மடம் - யாழ்)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 2ஆவது நாளாக மேற்கொண்ட ''ஒப்பரேசன் சஜபரா'' நடவடிக்கையின் போது ஏற்பட்ட விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**ஆண்டாள்** (யோகேஸ்வரி கந்தையா - புதுக்குளம் வவுனியா)

மேற்படி சமரில் வீரச்சாவெய்திய

**பவளராசன் . பவளம்** (இரத்தினம் ஞானம் புனித யூட்ஸ் வீதி, பேசாலை - மன்னார்)

மட்டு - ஆற்றைப்பற்றில் தனியார் பஸ்மீது முஸ்லிம் ஊர்காவல் படையினர் கைக்குண்டு வீசியதில் பலியான 03 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8854)

# இலங்கை விவகாரத்தில் இந்தியாவிற்கு புதிய வெளியுறவுக் கொள்கை தேவை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சுமார் நான்கு வருடங்களின் பின் திரு. டிக்சிற் தனது மௌனத்தைக் கலைத்துள்ளார், திரு- டிக்சிற் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்திய அரசின் கருத்துக்கள் என்ற ரீதியில் நோக்கப்பட முடியாதவை ஆயினும் இந்தியாவின் மூத்த இராஜதந்திரி ஒருவரினதும் முன்னாள் வெளியுறவுச் செயலாளரினதும் கருத்துக்கள் என்ற ரீதியில் அவை முக்கியமானவைஎன்பதில் சந்தேகமே தேவையில்லை-

1990இல் இந்திய இராணுவம் இலங்கை மண்ணை விட்டு வெளியேறி பின்னர் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு மெத்தனமான உறவே இருந்ததெனலாம்-அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஒரு நீண்ட மௌனத்தைக் கடைப்பிடித்தது எனலாம்-

இதற்கு இனப்பிரச்சினை தொடர்பான இந்திய தலையீட்டில் இராணுவ ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் ஏற்பட்ட தோல்வி முக்கிய காரணமாக இருந்தது எனலாம்- ஆயினும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக உருவாக்கப்பட்ட இந்திய- சிறிலங்கா உடன்பாடானது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாதுவிட்டாலும், சிறிலங்கா- இந்திய உறவில் ஒரு நெருக்கமான உறவைக் கொண்டு வந்திருந்தது என்பதும் உண்மை-

இந்நிலையில் இந்தியா தோல்வியுடன் அவமானகரமாக வெளியேறிய போதும் சிறிலங்காவுடனான பொருளாதார உறவுகள் வலுவடைந்துவந்தது-கூட்டு பொருளாதார ஆணைக்குழு இதற்கு உதவியாக இருந்தது. மேலும் இதற்குச் சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடித்த திறந்த பொருளாதாரக் கொள்கையும் காரணமாக இருந்தது-

அத்தோடு இந்திய இராணுவத்தை ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் எனக்கூறி உடன் வெளியேற வேண்டும் எனக் கோரியிருந்த அப்போதைய ஜனாதிபதி ஆர்- பிரேமதாசாவும், இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமாகிய பின்னர் இந்தியாவுடன்நட்புறவைப் பேணவே விரும்பினார்- இவரது விருப்பம் இவரது இறுதிக் காலத்தில்மிகவும் உயர்வாகவே இருந்தது- அவர் இந்தியாவுடன் மிகவும் நெருங்கியே சென்றார்- இந்திய விஜயங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டும் வந்தார்-

இந்தியாவும் பிரேமதாசாவின் நட்புக்கரத்தைப் பற்றிக் கொண்டது என்றே கூறவேண்டும்- இதே வேளை 1991இல் இடம்பெற்ற ராஜீவ்காந்தியின் கொலையானது சிறிலங்கா இந்தியா உறவை மேலும் நெருக்கமாக்கியது- இந்திய புலனாய்வுத் துறையும், பாதுகாப்பு அமைச்சும் சிறிலங்காவின் புலனாய்வுத் துறையுடனும் பாதுகாப்பு அமைச்சுடனும் நெருக்கமாக ஒத்துழைக்கவும் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் அளவிற்கும் சென்றன இந்தியா- சிறிலங்கா புலனாய்வு மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் இரு நாடுகளுக்கும் விஜயம் செய்தனர்- இந்திய கடற்படை - சிறிலங்காகடற்படை இரண்டிற்கும்இடையிலான கூட்டுரோந்து வரையும் பேச்சுக்கள் இடம் பெற்றன.

இவ்வாறாக இந்தியா சிறிலங்காவுடன் நெருக்கமாக இருந்த போதிலும் இனப்பிரச்சினை தீர்விற்கு 1987சமாதானஉடன்பாடேஅடிப்படையாக அமைய முடியும் என்பதில் இந்தியாவின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை- இதனை சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவும் தெளிவாக உணர்ந்திருந்த தோடு அதற்கேற்பநடவடிக்கைகளிலும்ஈடுபட்டிருந்தார் இந்நிலையில் இவ்விடயத்தில் இந்தியா தனது மௌனத்தைக் கலைக்காமலே இருந்து வந்தது மெத்தனமான ஒரு வெளியுறவுக் கொள்கையுடன் சிறிலங்காவின் உறவு நீடித்தது.

ஆனால்பிரேமதாசாவின்திடீர் மறைவின் பின்னர் பதவிக்கு வந்த சிறிலங்கா ஜனாதிபதியின் உள்ளூர் அரசியல் நிலைப்பாடும் வெளியுறவுக் கொள்கையும் முன்னைய நிலையில் இருந்து மாறுபட்ட கோணத்திலேயே அமைந்தன. இந்நிலையில் இந்தியா தனது மௌனத்தை கலைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் இலங்கை விவகாரத்தில் புதிய வெளியுறவுக் கொள்கைபற்றியும் சிந்திக்கவேண்டி வந்துள்ளது-

இதில் இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லை- பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது- என்ற டி. பி. விஜேதுங்காவின் நிலைப்பாடு முக்கியமானதாகும்-

இதனை டிக்சிற் தனது கட்டுரையில் தெளிவாகவே வற்புறுத்த முற்பட்டுள்ளார் ''1983 - 86 ஆம் ஆண்டு கால கட்டத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பட்டிலேயே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மீண்டும் கையாள்கின்றார் என்றே தோன்றுகின்றது. அரசியல் தீர்வு தேவை என்பதை உதட்டளவில்மட்டும்கூறிக்கொண்டு தமிழருக்கு எதிரான இராணுவ அரசியல் நிலைப்பாட்டை மேற்கொள்வதே இந்த நிலைப்பாடாகும்'' என்பதே டிக்சிற்றின் கூற்றாகும்.

இந்தவகையில் டிக்சிற்றின் கூற்றில் மறைமுகமான பொருள் ஒன்றையும் காணமுடியும்- அதாவது ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் காலத்தைஒத்தஒரு அரசில்சூழ்நிலையானதுடி. பி. விஜேதுங்காவினால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதே அதுவாகும்.

இந்தியாவைப் பொறுத்து டி. பி விஜேதுங்காவின் கொள்கை முற்றாக ஏற்றுக் கொள்ளக்கூடிய தொன்றாக இருக்கவில்லை- ஏனெனில் இந்நிலைப்பாட்டை இந்தியா ஏற்றுக் கொள்வதானால் 1987 ஆம் ஆண்டில் இந்தியா சிறிலங்காவுடன் செய்து கொண்டுள்ள சமாதான உடன்பாட்டை இந்தியாவும் நிராகரித்தாகும் என்பதோடு இந்தியா இலங்கை விவகாரத்தில் முற்று முழுதாகத் தோல்வி ஒன்றைத் தழுவியதைஏற்றுக்கொண்டதாக வேண்டும்.

மேலும், இனப்பிரச்சினை தொடர்பாக முற்றுமுழுதாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் நாடி நிற்குமாயின் அதன் பக்க விளைவுகள் தமிழகத்திலும்பாதிப்புக்களை ஏற்படுத்துவதோடு. இந்திய அரசியலையும் பாதிக்கவும் கூடும்.

அதாவது,ஒருபுறம் தமிழர்கள்மீது மேற்கொள்ளப்படும்இராணுவ நடவடிக்கையானது ஆயிரக்கணக்கில் தமிழர்களின் மரணத்திற்கும்லட்சக்கணக்கான அகதிகள்பிரச்சினையையும் உருவாக்கக் கூடும். இது இலங்கையில் தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கும்என்பதோடு. தமிழகத்தில் நெருக்கடிகளை உருவாக்கக் கூடும். இது தமிழகத்தில் ராஜீவ் காந்தியின் கொலையை வைத்து நடத்தப்படும் அரசியலைத் திசை திருப்பி விடக கூடும்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுஎன்பதுஒருபோதும் வெற்றி அளிக்கப்போவதில்லை என்பதை இந்தியா தெளிவாகக் கண்டு கொண்டுள்ளமையாகும். இதற்குத் தனியாக இலங்கையில் பெற்ற அனுபவம்மட்டுமல்ல. இந்தியாவில்பெற்ற பலஅனுபவங்களும் இந்தியாவிற்கும் பாடங்களாக அமையலாம். இந்நிலையில். இராணுவத் தீர்வே தொடருமானால், இலங்கையில் பிரிவினை என்பது தவிர்க்க முடியாதது என்பதை இந்தியா தெளிவாக உணர்ந்துள்ளது. இது இந்தியாவைப் பொறுத்து ஒரு ஏற்புடைய விடயம் அல்ல. இதனையும் டிக்சிற் தனது கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து டிக்சிற் குறிப்பிடுகையில் 'மத அல்லது இன அடிப்படையில் ஏற்படும் ஒரு பிளவு இந்தியாவின் சொந்த நலனைப் பாதிப்பதாக அமையும். ஏனைய நாடுகளுடனான உறவுகளில் இந்த வாதத்தின் நியாயத்தன்மையை இந்தியா ஏற்றுக் கொண்டால் இந்தியக் குடியரசில் இதனைப் பிரயோகிப்பதில் கூட கேள்விக்கு இடமிருக்காது'' என தெரிவிக்கின்றார்.

ஆனால், இனப்பிரச்சினை தொடர்பான விடயம் மட்டுமல்ல, டி- பி- விஜேதுங்கா கடைப்பிடிக்கும் வேறு பல கொள்கைகளும், நடவடிக்கைகளும் இந்தியாவின் கவனத்தைக் கவரக் கூடியவையாகவே உள்ளன. இதில் மலையகத் தமிழ் மக்களின் அரசியற் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் டி- பி- விஜேதுங்கா ஈடுபட்டுள்ளமைஇந்தியாவைப் பொறுத்து அதன் நலனைப் பாதிக்கும் அம்சமாகவும்புதிய சிக்கல்களை உருவாக்ககூடியவையாகவுமே உள்ளன-

இந்தியாவின் பார்வையில் சிறிலங்கா அரசியலில் மலையகத் தமிழ் மக்கள் எப்பொழுதும் தனது 'காய்கள்' என்ற நிலையே இருந்தது- இதற்கு அமைச்சர் தொண்டமானின் தலைமையும் வாய்ப்பாகவே இருந்தது- ஆனால், டி- பி- விஜேதுங்கா இன்று மேற்கொள்ளும் முயற்சிகள் தொண்டமானைப் பலவீனப் படுத்தியுள்ளது- டிக்சிற் இதனைத் தனது கட்டுரையிலும் தெரிவித்திருக்கின்றார்- ''அரசியல் உடைவுகாரணமாக ஏற்பட்டுள்ள மனவேதனையை மலையக மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, தமிழர்களுடைய இந்தக் குழுவில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தலைவராக உள்ள தொண்டமானின் பிடி பல வருடங்களின் பின் இப்பொழுது விடுபட்டுச் செல்வதாக'' கூறுகின்றார்.

**ஜெயராஜ்**

அதாவது மலையகத்தில் தமிழ் மக்களின் அரசியற்பலத்தை சிதைத்து விடுவதான டி- பி- விஜேதுங்காவின் நடவடிக்கையானது மலையகத்தில் தொண்டமான் மூலம் இந்தியா தனக்கிருந்த பிடியை இழப்பதற்குச் சமமான தொன்றாகவே கொள்ளப்படக் கூடியதாகும்- இந்நிலையில் இந்திய இலங்கை விவகாரத்தில் புறம் தள்ளப் படுவது தவிர்க்க முடியாத தொன்றாகவே போகும்.

அதிலும், டி- பி- விஜேதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில் வெளிநாடுகளின் மத்தியஸ்தம் தேவையில்லையெனத் தெட்டத் தெளிவாக அறிவித்துள்ளமையானது இந்தியா விரும்பினும் எதிர்காலத்தில் இனப்பிரச்சினை விடயத்தில் நேரடியாகத் தலையிட முடியாத நிலையை டி-பி. விஜேதுங்கா உருவாக்கி வருகின்றார் என்றே கொள்ள முடியும்- கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரின் சமாதான முயற்சிகளை நிராகரித்து, கியூபெக் பிரச்சினையை முதலில் தீர்த்து வையுங்கள் என அவர்களுக்கு ஆலோசனை கூறியுள்ள டி- பி. விஜேதுங்கா, இந்தியா இவ்விவகாரத்தில் தலையிட்டால் காஷ்மீர் பிரச்சினையையும், பஞ்சாப் பிரச்சினையையும் தீருங்கள் இங்கு நீங்கள் தேவையில்லை எனக்கூறினால் இதில் ஆச்சரியம் கொள்ள எதுவுமிருக்காது-

இவ்வாறாக சிறிலங்கா அரசாங்கத்தின் உள்நாட்டுக் கொள்கை இந்தியாவின் நலன்களை பாதிப்பதாக அமைந்துள்ள அதே வேளை சிறிலங்காவின் இன்றைய வெளியுறவுக் கொள்கையானது இந்தியாவின் பிராந்திய நலனைப் பாதிக்கக் கூடியதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி வருகின்றன- இதில் சிறிலங்கா நெருக்கமான சீனாவின்உறவுமுக்கியமானதாகும்-

சீனா சர்வதேச ஆயுத வர்த்தகத்தில் ஒரு கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்காத நாடு என்பதோடு இன்று மூன்றாம் உலகநாடுகளின் பிரதான ஆயுத விநியோகஸ்தராகவும் உள்ளது- இதற்கேற்ப தென்னாசியப் பிராந்தியத்திலும் சீனா இன்று முக்கிய ஆயுத விநியோகஸ்தராகவே உள்ளது-

இந்தவகையில் இந்தியாவுடன்எல்லைத் தகராற்றைக் கொண்டுள்ள சீனா - தற்பொழுது சற்று தணிந்த நிலையில் உள்ளது - இந்தியாவின் பரம வைரியான பாகிஸ்தானின் பிரதான ஆயுத விநியோகஸ்தர்களில் ஒன்றாகவும் உள்ளது. பாகிஸ்தானுக்கென அணுஆயுத தொழில் நுட்பத்தை விற்றுள்ள சீனா அணு ஆயுதங்களை தாங்கிச்செல்ல வல்ல ஏவாயுதங்களையும், விமானங்களையும் விநியோகித்துள்ளதாகவும்அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்களே தெரிவிக்கின்றன.

மேலும் இந்தியாவின் வட எல்லையில் உள்ள நேபாளத்திற்கும் ஆயுத விநியோகம் செய்வதில் சீனா ஈடுபட்டுள்ளது. இது குறித்து இந்திய நேபாள உறவில் சில நெருடல்கள் கடந்த வருடங்களில் ஏற்பட்டதும் உண்டு. இந்நிலையில் சிறிலங்காவிற்கும் பிரதான ஆயுத விநியோகஸ்தராக மாறுவதென்பது இந்தியாவைப் பெரிதும் பாதிக்கக்கூடியது என இந்திய வட்டாரங்கள் கருதுவதில் நியாயம் இல்லாமல் இல்லை. இதனால் 1987 சமாதான உடன்பாட்டின் மூலம் சிறிலங்காவின் வெளியுறவுக் கொள்கையில் இந்தியா விதித்த கட்டுப்பாடுகளில் பயனற்ற நிலையை உருவாக்கக் கூடும்.

இவ்வாறு சீனா சிறிலங்காவின் முழுமையான ஆயுத விநியோகஸ்தராக மாறும்பட்சத்தில் இந்தியா ஒரு வகையில் சீனாவின் இராணுவ கண்காணிப்புக்குள் உள்ளாகியதாகவே கருத இடமுண்டு. அத்தோடு தனது பிராந்தியத்திற்கு வெளியில் சீனா ஆதிக்கம்செலுத்துவதாகவும் இது அமைந்து விடும். இந்நிலையில் சீனாவுடனான சிறிலங்காவின் நெருக்கமான உறவானது இந்தியாவினால் வரவேற்கப் படக் கூடியதொன்றாக இருக்கப் போவதில்லை.

இந்நிலையில்தான் நான்கு வருடங்களின் பின்னர் இந்தியாவிற்கு இலங்கை தொடர்பானபுதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டியநிர்ப்பந்தம்எழுந்துள்ளது- இக்கொள்கையானது இந்தியாவின் உள்நாட்டு மற்றும் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்-

இந்த வகையிலேயே இந்தியா கடைப்பிடிக்கவேண்டியவெளியுறவு கொள்கை பற்றி டிக்சிற் தனதுஆலோசனைகளை முன்வைத்துள்ளார்- இதில் முக்கியமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாக இருப்பது விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாகவும் அதன் தலைவர் பிரபாகரன் தொடர்பாகவும் டிக்சிற் முன்வைத்துள்ள கருத்துக்களாகும்-

இதில், டிக்சிற்றுக்கு இரு குறிக்கோள்கள் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது- ஒன்று, இலங்கையில் இன்று சிறிலங்கா அரசிற்கு எதிரான பலம் பொருந்திய தலைமைத்துவத்தையும், தமிழ் மக்களுக்கு தலைமைத்துவம் கொடுக்கக்கூடிய சக்தியும் விடுதலைப் புலிகளிடமே உள்ளதென்பதாகும்ஏனைய தமிழ்க் குழுக்கள் பயனற்றவை என்பதை டிக்சிற் தனதுகட்டுரையிலே வெளியிட்டுவிட்டார். இரண்டாவது சிறிலங்கா இராணுவத்தால் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்பதாகும்- இதனால் இப்பிரச்சினையானது இலங்கையில் தமிழருக்கு தனிநாடு அமைப்பதற்கு வழி வகுத்துவிடும் என்பதும் ஆகும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# பெருமைக்குரிய பெண்

## சின்னத்தம்பி அன்னலெக்ஷ்மி

நமது காலத்தில் மனித நேய சேவையில் குறிப்பிடத்தக்க ஒருபெண் செல்வி அன்னலெக்ஷ்மி சின்னத்தம்பி. சான்றிதழ். விருது, கௌரவிப்பு என்ற செய்திகளையெல்லாம் விட விழிப்புலன் இழந்தோருக்கு வாழ்வளிக்கும் சீரிய நோக்கத்துடன் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் என்ற இல்லத்தை ஆரம்பித்த பெருமைக்குரியவர் இவர். 1988 ஜூன் மாதம் 29ஆம் நாள் தெல்லிப்பழையில் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தை நிறுவியதன் மூலம் அன்னலெக்ஷ்மி தன்னாற்றல் மானுட உன்னதத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நிரூபித்திருக்கிறார்.

— உணவு, உடை, இருப்பிடம்
— கல்வி, கலை கலாசாரத்துடன் தொழிற்பயிற்சி

— சுயமாக இயங்கக் கூடிய தன்னம்பிக்கை ஆகியவற்றினை வழங்கும் வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் சமுதாயத்துள் ஒத்திசைவாக வாழவும், பாடசாலைகளில் ஏனைய பிள்ளைகளுடன் பொருத்தப்பாடுடன் கற்கும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது, விளம்பர நோக்கில்லாத அர்த்தத்துடன் துர்க்கா தேவி தேவஸ்தானம், லங்கா சீமெண்ட் லிமிடெற் மற்றும் நலன்விரும்பிகள் வழங்கிய உதவியுடன் இரண்டு வருடங்களில் வாழ்வகம் வளர்ச்சி கண்டது. சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாகப் புலம்பெயர்ந்து. உதவி என்ற சூத்திரக் கயிற்றை இழந்து 10 ஜனவரி 1993 இல் இருந்து உடுவில் சுவாமி ஞானப்பிரகாசர் வீதியில் வாழ்வகம் இயங்கி வருகிறது. அதனை அறிந்து அங்கு சென்றோம்.

சுவாமி ஞானப்பிரகாசர் வீதியில் சிறிது தூரம் சென்றால் மல்வம் கிராமச் சூழலில்நம்பிக்கையுடன் உயர்ந்து நிற்கிறது விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம். முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் நட்புக் கலந்த முறையில் கதவைத் திறந்து எம்மை வளாகத்தினுள் அனுமதித்தான். சற்று நன்றாகவே உடையணிந்திருந்த அந்தச் சிறுவன் முன்னால் நடக்க நாங்கள் பின்னால் நடந்தோம், உன்னிப்பாகக் கவனித்தால் தவிர கண் ஊனமுற்றவர் என்பதன் எந்த அடையாளத்தையும் அந்தச் சிறுவனிடத்தில் காண முடியாது. மற்றவர்களை அறிந்து கொள்ளும் துல்லியமான சக்தியை எப்படியோ விழிப்புலன் இழந்தோர் வளர்த்துக் கொள்கிறார்கள்.

இல்லப் புறத் திண்ணையில் வாழ்வகத்தைத் தவிர்த்துவிட்டு அலுவலகத்தை பார்க்க முடியாது இரண்டும் ஒன்றுதான். அவ்வளவு கொடுமையான இட நெருக்கடி. அலுவலக எழுத்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவரை எங்கோ பார்த்திருக்கிறோம். அவர் தெற்கில் அரச பதவியில் இருந்திருக்க வேண்டும் - பரமநாதன்.

''எனது பெயர் ஏ. பரமநாதன், தெரியவில்லையா? இளைப்பாறிய பின் இந்தப் பணியில்'' என்றார். முகத்தில் அனுபவத்தின் ரேகைகள். குறைந்த கட்டணத்தில் வேலை பார்க்கும் 'சேவை மனப்பான்மை'யில் இவரும் நாளொன்றுக்கு இரண்டு மூன்று மணி நேரம் போய் வரும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பதை அவர் பேச்சிலிருந்து அனுமானிக்க முடிந்தது.

நாம் அலுவலகத்தில் இருக்கையில் சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க பெண் அந்தப் பக்கம் வந்தார்- ஒரு மாய உலகில் இல்லாத பக்குவம்- மிகச் சாதாரண உடை-

''இவர்தான் அன்னலெக்ஷ்மி சின்னத்தம்பி. வாழ்வகத்தின் பொறுப்பாளர்'' - பரமநாதன் அவரை அறிமுகம் செய்து வைத்தார்- அவர் மெதுவாகச் சிரித்தார்- அந்தச் சிரிப்பில் நம்பிக்கை இழையோடியிருந்தது- இன்னும் மௌனம் கலையவில்லை- ''நீங்கள் விழிப்புல வலுவிழந்தோரில் அக்கறை கொள்ள தூண்டுகோலாய் அமைந்தது எது?'' என்று ஆரம்பித்தோம்-

அவர் சொன்னார்-

''ஆசிரியர் பயிற்சி நெறி முடிந்து கோட்டாஞ்சேனை விவேகானந்தாக் கல்லூரியில் கடமையாற்றிய போது எனக்கு நல்ல அனுபவம் வாய்த்தது- கல்லூரியில் விழிப்புல வலுவிழந்தோர் கல்வி கற்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது- விழிப்புலன் இழந்த சிறார் சிலர் கல்வி கற்கவும் செய்தார்கள். அவர்கள் சங்கடப்பட்டு அல்லல்படுவது என்னை மிகவும் பாதித்தது- அவர்கள் கண்களால் காண முடியாததைப் பற்றி நான் அதிகம் கவலைப்படுவதுண்டு- எனது கண்களை இறுகமூடிக் கொண்டு விழிப்புலன் இழந்தோர் கஷ்டங்களை நான் உணர்ந்து பார்ப்பது வழக்கம்- இப்போது என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது-

',விழிப்புல வலுவிழந்த குழந்தைகளுக்கான அமெரிக்க நிதியம் மாறகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விழிப்புல வலுவிழந்தவர்களுக்குக் கற்பிக்கும் பயிற்சி நெறி ஒன்றை 1971இல் ஆரம்பித்தது இது ஒரு கல்வியாண்டுக் கற்கை நெறி- அதில் நானும் இணைந்து கொண்டு பயிற்சி பெற்றேன்- என்னைத் தவிர வேறு தமிழர் பங்கு பற்றவில்லை'' என்றார்-

முற்றத்தில் கண் பார்வை இழந்த ஒரு சிறுவன் சட்டியிருந்த பசுவுடன் விளையாடிக் கொண்டிருந்தான்- உடனே அவர் பார்வை அவன் பக்கம் திரும்பியது- ''அய்யோ மாடு முட்டப் போகிறதே'' என்று பதைத்தார்- விளையாட்டுத்தனம் விபரீதமாக முடிந்து விடுமோ என்ற பயம்- சின்னப் பையனை அழைத்து, ''இவன் புதிதாகச் சேர்ந்தவன் எழுத்துப் பழக்கிய பின் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டும்- வயது பதினொன்று'' என்றார்- அவன் தனக்குப் பன்னிரண்டு வயது என்று அடம் பிடித்தான்- இந்தச் சிறுவர்களோடு எப்படித் தாக்குப் பிடிக்கிறார் என்பது புதிரானவிசயம்தான்- 'தம்பி, தம்பி' என்று வார்த்தைக்கு வார்த்தை அழைத்து மிக அன்போடு பழகினார்- யாருக்குத்தான் அவரைப் பிடிக்காமல் போகும்?

''யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் இ. சபாலிங்கம் (முன்னாள்) ஒருமுறை 'கண் தெரிகிற மாணவர்கள் தெருவில் திரியப் போகிறார்கள்; கண் இல்லாதவர்களைக் கொண்டு வந்து என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டார். இச்சம்பவம் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்குக் கல்லூரியில் அனுமதி கேட்டபோதுதான் நடந்தது. அப்போது எனக்குக் கோபம் தான் வந்தது தரப்படுத்தல் தீவிரமாக அமுல்படுத்தப்படும் காலம் அது. அவர் ஆதங்கத்தில் அவ்வாறு கூறினார் என்பதைப் பிறகு உணர்ந்து



கொண்டேன். பிற்பாடு அவர் நிறைய உதவி செய்தார்''- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மனதில் பதிந்த சம்பவங்கள் பற்றிக் கேட்டபோது - ''வாழ்க்கையில் எல்லாமே மறக்க முடியாததுதான். என்னிடம் படித்த பிள்ளைகள் நல்லா வரும்போது எனக்குச் சந்தோஷம்தான்''.

இவரை ஒரு சாதாரண ஆசிரியர் என்று நினைப்பவர்கள் ஏமாந்துதான் போவார்கள். இவர் முன்னால் ஒரு பட்டியலே நிற்கிறது- மிருதங்க வாத்திய இசையில் முதன்மையாகத் தேறி மட்டக்களப்பு நுண்கலைக் கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கும் நேசராஜ் அன்னலெக்ஷ்மியின் மாணவர். டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் எம். ஏ: பட்டம் பெற்று கனடாவில் கலாநிதிப் பட்டத்துக்கு ஆய்வு மேற்கொள்ளும் பத்மநாதன் சிறிகமலன், டில்லியில் அதே பல்கலைக்கழகத்தில் எம்- ஏ படித்து சுகவீனம் காரணமாகக் கட்டுடை திரும்பியிருக்கும் பகீரதன் மற்றும் மட்டக்களப்பில் தர்சனம் என்ற விழிப்புலனிழந்தோர் கல்விநிறுவனத்தை இயக்கும் நாகராஜா இதயராஜன், ரவீந்திரன், பரமேஸ்வரன், மங்களராணி என்று அநுமான்வால் மாதிரிப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது- விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கு எதுவுமே இயலாது, என்று இல்லை என்பதற்கு அன்னலெக்ஷ்மியின் மாணவர்கள் நல்ல உதாரணம்.

விழிப்புலன் இழந்தோர் வாழ்க்கையில் வெள்ளைப் பிரம்பு என்ற வார்த்தையே இடம்பெறாத காலம் எழுபதுகள். வெள்ளைப் பிரம்பின் மூலம் பிள்ளைகளை விழிப்புலன் இழந்தோர் என்று அடையாளம் காட்டிக்கொள்ளவும் பெற்றோர் விரும்பவில்லை; பெற்றோரையும், மற்றவர்களையும் சந்தித்து முனைப்புடன் செயலில் இறங்கினார், பல சர்ச்சைகளுக்கு ஆளாகி, அவற்றை எல்லாம் கடந்து 1972இல் வெள்ளைப் பிரம்பை முதன்முதலில் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியவர் என்று பலராலும் பாராட்டப்படுபவர் அன்னலெக்ஷ்மி-

1976 வாக்கில் அமைச்சு வழங்கிய பதவி உயர்வை வேண்டாம் என்று மறுத்தார் விழிப்புலன் இழந்தோருக்குக் கற்பிக்க வேறு ஆசிரியர் இல்லாத நிலையில், இடமாற்றத்தோடு கூடிய பதவி உயர்வு விழிப்புலனற்ற மாணவரின் கஷ்டத்தை அதிகரிக்கச் செய்யும் என்று கணக்கிட்டார்- பதவிக்காக 'சங்கீதக் கதிரை விளையாடும்' இந்தக் காலத்தில், எத்தகைய பக்குவத்தை இவர் எழுபதுகளிலேயே அடைந்துள்ளார் என்பது எவருக்கும் மலைப்பையே ஏற்படுத்தும்.

31 டிசெம்பர் 1990-இல் இளைப்பாறி வாழ்வகத்தை மாத்திரம் இப்போது நிர்வகித்து வருகிறார் நற் சமூக நடு நிலையத்தின் அனுசரணையுடன்பயிற்சிபெற்றஇளரத்தங்களானஇவரது வாரிசுகள் இருவர்- செல்வி வே, நிர்மலா செல்விஎஸ்ஆர், ஜெயந்தி, இவர்கள் இராமநாதன்கல்லூரியிலும், யூனியன் கல்லூரியிலும் குறைந்த சம்பளத்தில் தற்காலிக ஆசிரியர்களாகக் கடமையாற்றுகிறார்கள்

வடபகுதியில் மெதடிஸ்த கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி, வீமன்காமம் ம வி, மகாஜனாக் கல்லூரி, யாழ், இந்துக் கல்லூரி, பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை, சாவகச்சேரி றிபேக் மற்றும் இந்து மகளிர் ஆகிய கல்லூரிகளில் விழிப்புலன் இழந்தோர் திட்டங்களை ஆரம்பித்த பெருமையும்இவருக்கேஉண்டு, சாதாரண விஷயங்களே நடைபெறாத இன்றைய சூழ்நிலையில் இன்று இத்திட்டம் இராமநாதன் மற்றும் யூனியன் கல்லூரி வரை சுருங்கியுள்ளது-

வாழ்வகத்தில் ஆண்-பெண் சிறார்கள் என்று எல்லாமாக பதினைந்து பேர். இவர்களில் சிலர் வீட்டுக்குப் போவதும் வருவதுமாக இருப்பார்கள். எப்படியாவது சராசரி பத்துப் பேரைப் பார்க்கலாம்- இட நெருக்கடி மற்றும் பணமுடை காரணமாக அகலக்கால்வைக்க முடியாத நிலை. 1987-ல் இந்திய இராணுவ நடவடிக்கையின்போது எல்லாம் போயிற்று- சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து இயல்பான பாதைகளில் நிதி உதவியைப் பெற முடியாத நிலை. வாழ்வகத்துக்கு உதவி தேவைப்படுகிறது- விழிப்புல வலுவிழந்தோரிடமிருந்து வசதியுள்ளவர்கள் சிலர் விலகியே இருக்கிறார்கள்- அவர்கள் எப்போதும் விலகியே இருப்பதேன்?

விழிப்புல வலுவிழந்தோர் எழுதும் உபகரணங்கள், காகிதாதிகள் (Brail Sheets, Abacus) மற்றும் பொருள்கள் என்று அநேகமாக ஒன்றும் இல்லை வழக்கமான சாதாரண கடதாசியில் அவர்கள் எழுதியிருந்ததைப் பார்த்த போது மனிதன் இவ்வளவு தானா, அவன் உறுத்தலற்றவன்தானா என்னும் அதிர்ச்சி ஏற்படுகிறது இனி, இயல்பாக விளையாடும் திறம் விழிப்புல வலுவிழந்த சிறார்களிடம் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், தொட்டோ உணர்ந்தோ பார்க்கக் கூடிய விளையாட்டுப்பொருள்களை அங்கு காணோம்- இந்தச் சிறார்கள் தமக்குக் கிடைத்த வாழ்க்கையை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானா?

செல்விசின்னத்தம்பி அன்னலெக்ஷ்மி ஒரு சாதாரண கமக்காரக் குடும்பத்தில் எட்டுப் பேரில் கடைகிப் பிள்ளை- இவர் தன்னாற்றலால் தன்னை உயர்த்திக் கொள்ளவில்லை- இருட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறார்களுக்கு - பார்வைக் குறைபாடு உடையோருக்கு உதவவேண்டும் என்ற உறவுத் தவிப்பில் தனிமை கொண்ட ஒற்றைப் பேடையாக செயலாற்றுகிறார். ஆலம் விதையைப் போடாவிட்டால் ஆலமரத்தைக் காண முடியாது. அதே போன்று விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் என்ற சின்ன விதையிலே அடர்ந்து படர்ந்த ஒரு பெரிய மரத்தைக் காண விரும்புவது சமூகத்தின் பொறுப்பு-

செல்வி சின்னத்தம்பி அன்னலெக்ஷ்மி தமிழ் மக்கள் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டிய ஓர் மனித நேய சேவையாளர். தன்னாற்றலால் தன்னை உயர்த்திக் கொள்ளாமல் இருட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறார்களுக்கு -பார்வைக் குறைபாடு உடையோருக்கு உதவ வேண்டும் என்ற உறவுத் தவிப்பில் தனிமை கொண்ட ஒற்றைப் பேடையாகச் செயலாற்றுகிறார் உரிய அங்கீகாரத்தை இன்னும் பெறாதவர்

- மதன் -

## பறக்கும் தட்டு மனிதர்கள்?

பறக்கும் தட்டு என்று கருதப்படும் மர்மவான ஊர்தி நம் உலகைச் சுற்றி அவ்வப்போது வலம் வருவதாக நம்பப்படுகிறது.

அண்மையில் பிரிட்டிஷ் நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ரோம் நகரின் பழமையான கட்டடம் ஒன்றை இடித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது 12 மனித உடல்களைக் கண்டுபிடித்தனர்- இந்த 12 மனித உடல்களும் மானிட உருவத்தை விட சற்றே மாறுபட்டதாக இருந்ததால் இவர்கள் பறக்கும் தட்டில் வந்து விபத்துக்குள்ளாகி இங்கு விழுந்திருக்கலாம் என்று தெரிவிக்கின்றார்கள்.

ஒன்பதடி உயரம், பெரிய காதுகள், பெரிய கண்கள் கொண்ட இந்த உடல்கள் நிச்சயம் இங்கே வசித்த மனிதர்களுடையவை அல்ல என்பது இவர்களது கண்டுபிடிப்பு. இம் மனிதர்கள் கி- பி- 79ஆம் ஆண்டில் இறந்தவர்கள் என்றும் சொல்கிறது இந்த ஆராய்ச்சி.

# ஏழை செவ்விந்திய விவசாயிகள்

# மெக்சிக்கோவில் நடத்தும் புரட்சி

**பாலகுமாரன்**

கடந்த சனவரிமாதம்எவருமே எதிர்பார்க்காதவண்ணம் தொடங்கப்பட்ட மெச்சிக்கோ செவ்விந்திய மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டம் இப்போது பேச்சுவார்த்தைகள் என்னும்கட்டத்திற்கு ஊடாகநகர்கின்றது. இச்செவ்விந்தியமக்களின்போராட்டம் பெற்ற உலகளாவிய அனுதாபம், விளம்பரம், அவை கொடுத்த அழுத்தம் காரணமாகவே தனது அடக்கு முறை முயற்சிகளை தற்காலிகமாக மெச்சிக்கோ அரசு கைவிட்டு பேச்சுவார்த்தைகளில் இப்போது ஈடுபட்டு உள்ளது. பேசிப்பார்ப்போம் என்ற வகையில் தாங்கள் இப்போது செயற்படுவதாக சபாடிஸ்ரா தேசிய விடுதலை இராணுவத்தின் (Zapatista National Liberation Army) தலைமையாக உலகிற்கு அண்மையிலே அறிமுகமான மார்கோஸ் கூறினார். மெச்சிக்கோ சனாதிபதி கார்லோஸ் சலினா சுக்கோ (Carlos Salinas de Goatavi) எல்லாமே பெருத்த அதிர்ச்சியாகி விட்டது. செவ்விந்திய மக்கள் போராட்டம் கிளப்பிய உலகளாவிய உணர்வலைகள் அவரை உடனடியாக போர் நிறுத்தமொன்றை அறிவிக்க பேச்சுகளை ஆரம்பிக்க தள்ளிவிட்டது. தமது காலம் காலமான மனக்குறைகளை இப்போது அரசுக்கு முறையாக அறிவித்து விட்டு செவ்விந்திய மக்கள் இப்போது காத்து நிற்கின்றார்கள். எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நாட்டில் பொதுத் தேர்தல் நடக்க இருப்பதால் சனாதிபதி ஏதாவது செய்ய வேண்டிய நிலையில் இப்போது இருக்கிறார்.

மெச்சிககோவின் புரட்சி என்று வரலாற்றாளரால் அழைக்கப்படும் மெச்சிக்கோவின் நிலமற்ற ஏழை விவசாயிகளின்கிளர்ச்சிக்கு தலைமை தாங்கி நடாத்தி பெரும் வீரனாக மதிக்கப்படும், எமிலியானோ சபாட்டானாவின் (Emiliano Zapata) பெயரை வரித்துக் கொண்ட செவ்விந்திய மக்களின் விடுதலை அமைப்புஏறத்தாழஇரண்டாயிரம் பேரைக் கொண்டுள்ளதாக கருதப்படுகிறது இவர்களது போராட்டப்போலவே இவர்கள் தாங்கியிருந்த புராதனமான சில ஆயுதங்களும் மிகப்பழைய M-1 கார்பைன்களும் கத்திகளும் ஏன் மரத்தினாலான துப்பாக்கி வடிவிலமைந்த கருவிகளும் உலகைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது இவர்களது புதிய வருகை கடந்த 20 வருடங்களில் முதன்முறையாகபூர்வீக விவசாயிகளின் எழுச்சியாக கருதப்படுகிறது அதிலும் இவ்வருடம் பூர்வீக மககளின் ஆண்டாக ஐ-நா-பிரகடனம் செய்துள்ள நிலையிலே இவர்கள் எழுச்சியும் தோற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

சென்ற சனவரி மாதம் நியூயார்க் டைப்ஸ் பத்திரிகையில வெளியான இவர்களது அறிக்கையில் ''இலட்சக்கணக்கான மெக்சிக்கோ மக்கள் - குறிப்பாக நாங்கள் எத்தகைய மிகமோசமான சூழலிலே வாழ்ந்து மடிகின்றோம் என்பதை மெச்சிக்கோவின் ஏனைய மக்களுக்கும் பிற உலகிற்கும் எடுத்துக்காட்டவே இக்கிளர்ச்சி'' என தமது நோக்கத்தினை பிரகடனப்படுத்திய சபாடிஸ்ரா முன்னணியினர். இன்னொரு சிக்கலான பிரச்சினையையும் எழுப்பினர். இவர்களது கிளர்ச்சிக்கு இதுவே உடனடிக் காரணம் என்றும் கருதப்படுகின்றது. உலகிலே இன்னொருதடையற்ற வணிக வலயமாக வட அமெரிக்கபகுதியில் கடந்த சனவரிமாதம் கைச்சாத்தான 'நப்தா' (NAFTA) எனப்படும் வட அமெரிக்க சுதந்திர வணிக உடன்பாடாகும். இதனை, செவ்விந்திய மக்களை இன்றும் பின் தள்ளும் முயற்சியாகவே இவர்கள் கருதுகின்றனர். அமெரிக்கா, கனடா, மெச்சிக்கோ, நாடுகள் செய்து கொண்ட உடன்பாடு மேட்டுக் குடிக்கே நன்மையை மேலும் கொடுக்கப் போகின்றதுஎன்றும், ஏற்கனவே மிகப் பின் தங்கி வறுமையில் வாடும் ஏழை விவசாயிகள் எவ்வாறு வளர்ந்த நாடுகளின் நவீன விவசாய முறைமைகளோடு போட்டியிட முடியும் என்றும் இவர்கள் கேள்வி எழுப்பினர் சபாடிஸ்ராவைப் பொறுத்தவரையில் இந்த உடன்பாடு என்பது ''மெச்சிக்கோ செவ்விந்திய மக்களின் இறப்புச் சான்றிதழ்'' என்றே கருதப்படுவதாக அவர்கள் அறைகூவினர்.

ஏனென்றால் சனாதிபதி சலினாவின் மெச்சிக்கோவை நவீன கைத்தொழில் மயமாக்கலுக்கு உட்படுத்தும் புதிய திறந்த பொருண்மிய கொள்கையின் விளைவாக மெச்சிக்கோவின் வடக்கு, மத்திய பகுதிகளில் மாத்திரமே அரசின் கவனத்திற்கு உட்பட்டன. மெச்சிக்கோவின் தென்பகுதி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. குறிப்பாக மிகப் பின்தங்கியிருக்கும் தென் மாநிலமான சியாபாசின் (Chiapas) அரைவாசி மக்கள் மாயன் இன செவ்விந்திய மக்களேயாவர். தற்போதைய சனாதிபதியின் ஆளும் கட்சியான (PRI - Institutional Revolutionary Party) தாபன மாற்றத்திற்கான புரட்சிகரக் கட்சி கடந்த 65 வருடமாக மெச்சிக்கோ அரசியல் அரங்கில் மேலாண்மைச் சக்தியாக இருந்து வருகின்றது. இவர்களது மேற்கத்தைய பாணியிலான நவீனபொருண்மியக் கொள்கைகள் வழமை போலவே மெக்சிக்கோவின சூழலை நச்சுமயமாக்கி தொழிலாளர் வாழ்க்கைத்தரத்தினை மோசமாகப் பாதித்து எல்லாவற்றையுமே சந்தைப் பொருண்மியச் சக்திகளின் கட்டுப்பாட்டில்விட்டுவிட்டது. இதனால் நாட்டில் சனநாயக மறுப்பு செயற்பாடுகள் சமூக ஏற்றத் தாழ்வு அதிகரிப்பு என்பதோடு உலகிலே மிக மோசமான சூழல்நச்சுத்தன்மைகொண்டு மக்கள்சுத்தமான காற்றையே சுவாசிக்க முடியாத அவல நிலைக்கு அங்கு இட்டுச்சென்றுவிட்டது. இப்படிப்பட்ட ஒரு ஆட்சியானது இன்று செவ்விந்திய மக்களின் ஆயுதம் தாங்கிய எழுச்சியல் திக்குமுக்காடிப் போய் நிற்கின்றது.

ஏனென்றால் இப்போது செவ்விந்திய மக்களின் எழுச்சியின் பின் நிலைமைகள்தலைகீழாக மாறுபாடு அடைகின்றன. மறுக்கப்படும் தமது உரிமைக்கான குரல்களை இன்று பலரும் அங்கு எழுப்பத் தொடங்கிவிட்டனர். அவர்களுக்கு சபாடிஸ்ராக்களின் போராட்டமும் முன்மாதிரியாகவும் உந்துசக்தியாகவும் ஆகிவிட்டது ஏனென்றால் 1980 களில் இருந்தே சியாபஸ் பகுதியில் கொடிய வறுமையின் பிடியில் சிக்கியிருந்த ஏழை விவசாயிகள் அங்குள்ள முற்போக்கு கருத்துள்ள றோமன் கத்தோலிக்க மத பீடத்தின் உதவியோடு பொருண்மிய மேம்பாட்டிற்காக தமது அரசியல் உரிமைகட்காக அமைதி வழியில் அகிம்சை முறையில பல போராட்டங்களை பல்வேறு அமைப்புகளுக்கூடாக முன்னெடுத்தனர் ஆனால் அவை அரசினால் கணக்கெடுக்கப்படாததோடு இவை சனநாயக விரோதச் செயல்களாகவும் கருதப்பட்டு கடும் அடக்குமுறைபயன்படுத்தப்பட்டது மக்கள் கொடுமைகட்கு உட்படுத்தப்பட்டு சிறையில் இடப்பட்டனர் விடுதலை இறையியல் சார்பு கிறித்தவ குருமார் அரசினால குழப்பம் விளைவிப்போராக குற்றம் சாட்டப்பட்டனர் கண்டிக்கப்பட்டனர்.

ஆனால் பொறுத்தது போதும என்கிற நிலையில் செவ்விந்திய மக்கள்ஆயுதம்தாங்கி எதிர்த்துப் போராட முற்பட்டபின் நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டன வறுமையில் வாடியவர்களும் வாக்களிக்க உரிமையற்றவர்களும் அரசியல் அதிகார பீடத்தினை கலங்கடிக்கமுடியுமென்று நிரூபித்து விட்டனர். இப்போதுஇச்செய்தி மெக்சிக்கோ எங்கும் காட்டுத்தீயாகப்பரவுகின்றது.

இனி மெச்சிக்கோ முன்னரைப் போல இருக்க முடியாது என்கிறார் ஆய்வாளர் ஒருவர் பூர்வீகக குடிகளின் தேசியக் கூட்டணி அமைப்பாளர் ஒருவர் அண்மையில் பின்வருமாறு கூறினார்: 'இனியும் எங்கள் பொறுமையை சோதிக்க வேண்டாம் சபாடிஸ்ராவினர் நாடு முழுவதுமே தோன்றுவர்' என்றார் ஏனென்றால் மெச்சிக்கோவின் புதிய வரலாற்று ஆரம்பக் கட்டமாக கருதப்படும் 1910ஆம் ஆண்டின் மெச்சிக்கோ புரட்சியின் போது 'மண்ணும் விடுதலையும்' என்பதே ஆதார சுருதியாக ஒலித்த போதும் கூட பின்வரும் காலங்களில் செழிப்புள்ள கொழுத்த நிலவுடைமையாளர்களில் தளபதி ஒருவராக தன்னை இனம் காட்டிய கப்டன் கிறிஸ்டோமல் கூறிய வார்த்தைகள் உலகெங்குமே உற்றுக் கேட்கப்படுகின்றது நாங்கள் வெறும் விவசாயிகள் எவ்வளவு காலம் தான் எமது இழிவு நிலையை எம்மால் பொறுக்க முடியும்? இப்போது எமது கைகளில் ஆயுதம். எமக்கு பயமில்லை. தாக்கி மறையும் எம்மை எவராலும் ஒன்றும் செய்ய முடியாது. என்கிறார்.

இப்போது மெக்சிக்கோவின் மற்றைய மாநிலங்களிலும் சியாபசின் ஏனையபகுதிகளில் ஆங்காங்கே தன்னிச்சையான கிளர்ச்சிகள் தொடர்கின்றன. ஒரு நகரத்திலே ஊழலும் ஊதாரித்தனமும் நிரம்பிய நகர முதல்வரைச் சுற்றி வளைத்து அவரைப் பதவியிலக்கி புதிய நகர மன்றை அந்த இடத்திலேயே மக்கள் தெரிவு செய்தனர் இன்னுமொரு நகரத்திலோ 4000க்கும் மேற்பட்ட செவ்விந்தியமக்கள் அரச திணைக்களங்களை முற்றுகையிட்டு தமது குறைகளை உடனடியாகத் தீர்க்குமாறு கூறி வருகின்றனர் வேறு பல இடங்களிலே, வேலை நிறுத்தங்கள், சாலை மறியல்கள என இவ்வளவு காலமும் வாயில்லாப்பூச்சிகளாக வாழ்ந்த மக்கள் திடீரென வலிமைபெற்று விட்டனர் 'நாங்கள் எல்லாருமே சபாடிஸ்ரா போராளிகள் அல்லர். ஆனால் எமக்கிடையில் நிலவும வறுமை ஒன்றே' என்கிற குரல்களே இன்று மெச்சிக்கோவில் மேலோங்குகின்றது.

இவ்வளவு காலமும் வெளி உலகிற்கு ஏதோ பெரும் வளர்ச்சியை நோக்கிச் செல்லும் நவீன மயமான நாடாக மெக்சிக்கோவை காட்டமுற்பட்ட அரசுக்கு செவ்விந்திய மக்களின் போராட்டம் தமது முகமூடியை பிம்பத்தை சிதைத்துவிட்டமை பெரும் திகைப்பாகிவிட்டது. மேற்குலக தொடர்பு சாதனங்களோ செவ்விந்தியமக்களின்பிரசார உத்திகண்டு வியப்படைந்து இதை ஒரு புரட்சியாகவே வருணித்தனர். இவ்வளவிற்கும் இம் மக்களின் போராட்டம் பெரும் அறிவு சார்ந்தோரின் பின்னணியைக் கொண்டதல்ல- அல்லது ஏனைய இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தோன்றிய எழுச்சிகட்கு அடிப்படையாக அமைந்த மார்க்சிய, மாவோயிச தத்துவங்களைப் பின்புலமாகக் கொண்டதும் அல்ல. 'நாங்கள் பொதுவுடமைவாதிகள் அல்லர்- நளை நாம் என்னவாக மாறுவோம் என்பதே எமக்குத் தெரியாது'' என்கிறார் கப்டன் கிறிஸ்டோபல்.

எனவே செவ்விந்திய மக்களின் திடீர் எழுச்சியானது இன்று இந்த உலகின் சொந்தக்காரர்களுக்கு மேற்குலகம் செய்த அநீதியை மீண்டும் நினைவுபடுத்த - குற்ற உணர்வினால் மேற்குலகம் தலைகவிழ - உலகம் கிளர்ந்தெழும் மக்களை வியப்புடன் பார்த்து நிற்கின்றது- ''மன்னிக்கப்பட வேண்டியவர்கள் அவர்களல்லர் நாங்களே'' என்கிறார் நோபல் பரிசு பெற்ற அறிவாளர் ஒருவர்- எனவே சபாடிஸ்ரா போராளிகள் முன்வைத்த கோரிக்கைகட்கு மெச்சிக்கோ அரசு எவ்வாறு பதிலளிக்கப் போகின்றது என உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது, பதில் எதுவாக இருந்தாலும் முன்னைய இழந்த தமது இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை முறைமையை இனி யாராலும் இம் மக்களுக்கு மீட்டுக் கொடுக்க முடியாது என்பதே கசப்பான உண்மையாகும். எது எப்படியிருந்தாலும் பாரதிதாசன் பாடியது போல ஓடப்பராக இருக்கும் ஏழையப்பர் எல்லாரும் இன்று மெச்சிக்கோவில் உதையப்பராக மாறி விட்டனர் என்பதே இன்றைய மெச்சிக்கோவின் நிலைமையாகும், அது கூறும் செய்தியாகும்.

---

**பூமி மனிதனுக்குசொந்தமானதல்ல மனிதன்தான் பூமிக்கு சொந்தமானவன். இது எங்களுக்கு தெரியும். இங்கு எல்லாமே ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருக்கின்றது-பூமிக்கு என்னநேரிடுகின்றதோ அதுவேமண்ணின் மைந்தர்களுக்கும் நேரிடும்- உயிர்களின் வாழ்க்கை வலையை மனிதன் பின்னவில்லை, அதில் அவன் ஒரு இழைதான். எனவே அந்த வலைக்கு அவன் என்ன செய்கிறானோ அதை மனிதன் தனக்குத்தானே செய்து கொள்கிறான்- இதமான காற்றையோ, அதைச்சூழ்ந்துள்ள வானத்தையோ விற்கவோ வாங்கவோ முடியுமா? செவ்விந்தியனுக்கு மண்ணும் காற்றும் மிக முக்கியமானவை. எங்களை வெற்றி கொண்டு நீங்கள் வாழ்வதை விதியென கொண்டால் அவ்விதி எமக்குப் புரியாத புதிர் வெள்ளை மனிதனும் பொது விதிகளிலிருந்துஒருபோதும் தப்பிக்க முடியாது-**

செவ்விந்திய தலைவர் ஒருவரின் கூற்று

நன்றி: கலைக்கதிர்

---

## கிரிக்கெட் உலகில் முன்னணி வீரர்கள்

இன்றைய கிரிக்கெட் உலகில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்களின் வரிசைப் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது இதில் முதல் பத்து வீரர்களின் பெயர்களும், நாடுகளும் வருமாறு:

### துடுப்பாட்ட வீரர்கள்

| | | |
|---|---|---|
| 1. | கிரகாம் கூச் | (இங்கிலாந்து) |
| 2. | ஹேன்ஸ் | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 3. | தெண்டுல்கர் | (இந்தியா) |
| 4. | ரிச்சர்ட்சன் | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 5. | டேவிட் பூன் | (ஆஸ்திரேலியா) |
| 6. | பிரயின் லாரா | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 7. | ஸ்டீவ் வாக் | (ஆஸ்திரேலியா) |
| 8. | சித்து | (இந்தியா) |
| 9. | மார்க் டைலர் | (ஆஸ்திரேலியா) |
| 10. | மார்டின் குரோவ் | (நியூசிலாந்து) |

### பந்து வீச்சாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | வாகர் யூனூஸ் | (பாகிஸ்தான்) |
| 2. | அனில் கும்பிளே | (இந்தியா) |
| 3. | அம்புரோஸ் | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 4. | வார்ன் | (ஆஸ்திரேலியா) |
| 5. | ஆலன் டொனால்ட் | (தென் ஆப்ரிக்கா) |
| 6. | இயான் பிஷப் | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 7. | மெக்டர் மாட் | (ஆஸ்திரேலியா) |
| 8. | பெஞ்சமின் | (வெஸ்ட் இண்டீஸ்) |
| 9. | மெர்வ் ஹியூஸ் | (ஆஸ்திரேலியா) |
| 10. | பிரேசர் | (இங்கிலாந்து) |

# பழசும் புதுசும்

"இவர்கள் சிறியவர்கள்; எம்மிடமோ பெரிய படை உள்ளது: யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை மற்றும் தேர்ந்த படை வீரர்கள் பலர் உள்ளனர்'' எனக் கூறிக்கொண்டு எமது நாட்டை கபளீகரம் செய்ய எதிரிகள் முனைகின்றனர். அந்த எதிரிகளை முன்னே சென்று தாக்கி அவர்களை சிதறியோடச் செய்யவேண்டும், அவ்வாறு நான் செய்யாவிட்டால் எமது மக்கள் கண்ணீர் பெருக்கிப் பழிதூற்றும் நிலை என்னைச் சூழ்ந்துவிடும்: புலவர் பெருமக்கள் என்னைப் பாடாது விட்டுவிடுவர். என் சுற்றத்தார் துயர் மிக்கவராகுவார்: என்னைநாடி வந்து இரப்பவர்களுக்கு கொடுக்க முடியாத அளவுக்கு வறுமையுடையவனாக நான் ஆகிடுவேன்: தலையாலங்கானத்து செரு வென்ற நெடுஞ்செழியன் போருக்குப் புறப்பட்டது பற்றி புறநானூறு பாடல் தொகுப்பின் 72-வது பாடல் இளையோனின் வஞ்சினம் என்ற தலைப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளது. இப்பாடல் வருமாறு:

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படைஅமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கி
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே;

சிறுவர்களும், பெண்கள் சிலருமே விடுதலைப் புலிகளால் படையினரை எதிர்க்கின்றனர், வெகுவிரைவில் இவர்களை முறியடித்து இலங்கைத் தீவின் பிரதேச ஒருமைப்பாட்டையும், இறைமையையும் காப்பாற்றுவோம்: தமிழர்களுக்கு என்று ஒரு தாயகப் பரப்பு இலங்கைத் தீவில் எங்குமே இல்லை என்று வீராப்புடன் பேசிய படைகளை நகர்த்திய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா தனது பாதுகாப்பையே உறுதிப்படுத்த முடியாமல் தலைநகரில் சரிந்ததை எண்ணும்போது பின்வருமாறே சொல்லத் தோன்றுகின்றது:

உண்மை உணர்ந்தே உலகம் சிலிர்க்கும்
"மழலையர் சிலரும் மங்கையர் சிலருமே
படையினை எதிர்க்கும் புலிகளாய் உள்ளனர்
வேழம் நிகர்த்த பெரும்படையுடனே
விமானம், டாங்கி, பீரங்கி எனவரும் ஆயுதம் பலவும்
சூழ இருக்கையில் சிறுங்கா வெல்லும்''
இறுமாப்புடனே வார்த்தைகள் இயம்பி
கொழும்பிலிருந்து கூவிய அமைச்சர்
களத்திடை வீழ்ந்ததை கண்டதால்
உண்மை உணர்ந்து உலகம் சிலிர்த்தது.
மழலையர் மங்கையர் புலிகளாய் இருப்பினும்
தன் உயிர் வெறுத்து தமிழுயிர் காத்திட
இம் மண் மீட்டொரு தாயகம் சமைத்திட
தயங்கிடாப் படையின் தானைத் தலைவனின்
ஆற்றல் கண்டே உலகம் வியக்கும்
போற்றும் இப் புனிதன் ஈட்டும் சாதனை
பொற்காலம் இது வென்றே தமிழ் மண் மகிழும்!

- இளையவன்

# சாந்தனின் 'காலங்கள்' (சிறுகதை தொகுப்பு)

## ஒரு நோக்கு

ஈழத்து இலக்கியங்களைப்படைத்துக் கொண்டிருப்பவர்கள், தற்போது எங்கோ இருக்கிறார்கள் என்றமாவை வெளிநாடுகளிலும், அயல் நாடான இந்தியாவின் தமிழ் நாட்டிலும், கொழும்பிலும் பரப்பப்பட்டு வருகிறது:

குறிப்பிட்ட சகல இடங்களிலும் ஈழத்து எழுத்தாளர்கள் அல்லது கவிஞர்கள் இருக்கின்றார்கள் என்ற மெய்மையைத் தவிர, இந்த ஈழ மண்ணிலே இலக்கியம் படைக்கக் கூடிய எந்த ஒரு எழுத்தாளரும் இல்லை; அனைவரும் நாட்டில் எரியும் பிரச்சினைக்கு அச்சப்பட்டு வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்றோ அல்லது கொழும்பில்- இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார்கள் என்றோ பரவிவரும் கருத்தில் உண்மை இருப்பதாக இல்லை.

உண்மையான பிரச்சினைகளை வெளிப்படுத்தக் கூடிய இந்த மண்ணின் நிகழ்வுகளை ஆவணப்படுத்தக் கூடிய பல எழுத்தாளர்கள் தாய் மண்ணில் தலை நிமிர்ந்த வண்ணம் ஆக்க இலக்கியப் படைப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை இந்த மண்ணிற்கு வெளியே 'உல்லாச புரியில்' வாழ்ந்து கொண்டிருக்கும் சிலருக்குசொல்லித்தான் ஆக வேண்டும் என்ற அவசியமில்லை.

இந்த மண்ணில் மக்களின் விடுதலையைநோக்கியதேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்று வரும் இந்த வேளையில்- அந்நிய நாடுகளிலிருந்து கொண்டு இந்த மண்ணின் 'சாபக் கேட்டை' எண்ணி துயரப்படுவதாகவும் துன்பப்படுவதாகவும் வசனம் பேசும் சிலர் தாம் புலம்பெயர்ந்த பின்னர்-

ஈழத்து இலக்கியம் வேற்று நாடுகளிலிருந்துதான் படைக்கப்படுகின்றன என்ற ஒரு கருத்தை அறிவுலகத்தை நோக்கி பரப்பிவருவது வெட்கக் கேடான விஷயந்தான்.

ஈழத்தில் சிறந்த இலக்கியங்கள் பிறக்கின்றன. கதை, கவிதை, நாடகங்கள் தரமானவையாக ஆக்கப்படுகின்றன.

பத்திரிகைகளின், சஞ்சிகைகளின், சிற்றேடுகளின் தொகை குறைவாகஇருக்கின்ற போதிலும் படைப்பாளர்களின் தொகையோ, படைப்புக்களின் தொகையோ குறைந்து விடவில்லை;

இந்த வகையில் ஈழத்து எழுத்தாளர் (இந்த மண்ணில் வாழ்பவர்) சாந்தனின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று சமீபத்தில் வெளிவந்தது;

**அலட்டல் இல்லாத அதேசமயம் குறியீட்டுணர்வு கொண்டதாக அமைந்துள்ள கதைகள் பல கலைத் தன்மை வாய்ந்ததாகக் கொள்ளலாம்.**

மொத்தம் 15 சிறுகதைகள் அடங்கிய இந் நூலில் சாந்தன் இந்த மண்ணின் நேசிப்பை, தாகத்தை, வெளிப்படுத்தியுள்ளார்; சில நல்ல கதைகள் அடங்கிய இத்தொகுப்பில் எல்லாமே நல்ல கதைகள் என்று சொல்வதற்கும் இல்லை.

ஆயினும்-

சிறுகதைகளா? அல்லது குறுங்கதைகளா என்ற தடுமாற்றத்தை அவர் சில கதைகளில் (பல என்றும் எடுக்கலாம்) ஏற்படுத்தினாலும் அவர்சொல்லவந்தசெய்தியை சுவையாகச் சொல்வதில் பின்னிற்கவில்லை என்றே குறிப்பிடலாம்;

அலட்டல் இலாத - அதே சமயம் குறியீட்டுணர்வு கொண்டதாக அமைந்துள்ள கதைகள் பல கலைத் தன்மை வாய்ந்தவையாகக் கொள்ளலாம்;

புதிய கருப்பொருளைக் கொண்டு, வித்தியாசமான தளத்தில் நின்று சில கதைகள் ஆக்கப்பட்டுள்ளன. இவை வாசிப்போரை வசப்படுத்தக் கூடியதாக உள்ளன.

சாந்தனின் படைப்பில் உள்ள இந்த 'சுருக்கத்' தன்மை வாசகரிடம் விசித்த காட்சியை கட்புலன் ஊடாக சொல்ல மறுத்தாலும், அந்நிலையில்- சித்தனை குமுழ்களில் புதிய புதிய காட்சிகள்... கோலங்கள் விரிந்து செல்வதை உணரமுடிகின்றது

இந்த விதத்தில் நூலாசிரியர் சாந்தன் வெற்றி பெற்றுள்ளார் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை;

சில கதைகள், கதையின் கடைசி வரியிலேயே புரிகிறது வேறுசில்கதைகள் தலைப்பின் மூலமே புரிய வைக்கப்பட்டிருக்கின்றன.

இது சாதாரண வாசகனை குழப்பத்தில் ஆழ்த்தும் என்ற யோசனை எழுத்தாளருக்கு ஏற்படவில்லையா? அல்லது இதுவே இதன் வெற்றி என்ற எண்ணம் எழுத்தாளரிடம் உள்ளதா? என்பது கேள்விக்குரியதே;

இத்தொகுப்பில் இதயத்தை நெருடுமாப்போன்று பல கதைகள் உள்ளன; அனேகமான கதைகளில் அரசியல் யதார்த்தம் சொல்லப்பட்டுள்ளன;

'இரு கோடுகள்', 'அந்நியமான உண்மைகள்', 'ஒரு விருந்தின் முடிவு', 'அதே வீதியெனில்...' ஆகிய கதைகளுடன் மேலும் சில கதைகள் நெஞ்சில் ஆழமாகப் பதிகின்றன.

'நன்றி' என்ற கதை இந்த சமூகத்தின் நன்றி உணர்வை? தெளிவாகச் சொல்ல முயற்சித்திருக்கிறது;

இந்திய இராணுவத்தை மோப்பம்பிடித்து அவர்களின் வருகையை வீட்டாருக்குச் சொல்வதற்கென்றே வளர்க்கப்பட்ட நாய், இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் தேவையற்ற ஜீவனாகத் தென்படுகிறது.

ஆசிரியர் தன் நடையின் மூலம் ஒரு பக்கத்தில் சமுதாயத்தின் சுயநலத்தை வெளிப்படுத்த முனைந்துள்ளார்.

இதேபோல 'அஸ்பெஸ்ரஸ்' என்ற கதையும் அமைகிறது. சுருக்கத்திலும் நடையிலும் சொல்லப்படும் கலை நேர்த்தியிலும் அழகியலிலும் இக்கதை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடு ஒன்றிற்குச் சென்றுவிட்டு பத்து வருடங்களின் பின் இங்கு வந்த பாலாவும் அவன் குடும்பமும் சிவா வீட்டிற்கு விருந்துண்ண வந்தபோது கதை ஆரம்பிக்கிறது:

"பாலாவில் பெரிதாக ஒரு மாற்றமும் தெரியவில்லை" என்று ஆரம்பிக்கும் ஆசிரியர்-

தன் நண்பன் சிவாவிடம் பாலா அஸ்பெஸ்ரஸ் கூரையை மாற்றும்படி, இது ஆபத்தானது என்று சொல்லும்போது சிவாவால் சிரிப்பைத்தான் வெளிப்படுத்த முடிந்திருக்கிறது;

இந்த தேசத்தில் என்ன நடக்கிறது? இந்த மண் எதைத் தேடுகிறது? இங்குள்ள தேவைகள் என்ன? பிரச்சினைகள் என்ன? என்பதை அறியாமல் அஸ்பெஸ்ரஸ் கூரையை மாற்றும்படி கேட்கும்நண்பனைப் பார்த்து சிரிக்கத்தான்முடிகிறது. இதில் ஒரு சுகமான விரக்தி வெளிப்படுமாப்போன்றுதான் வாசகர்களுக்கு தென்படும்; பட வேண்டும்.

அலட்டல்கள் அற்ற வார்த்தை வீக்கம் அற்ற பல கதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்ற போதிலும் சாந்தன் காத்திரமான விஷயங்களை எளிமைப்படுத்தியிருக்கலாமே. இதன் மூலம் சொல்லும்விஷயம் பலரிடம் சென்றடைவதை விரும்பியிருக்கலாமே?

சிறுகதை இலக்கியத்துறையில் புதுமைப்பித்தன்பாணி, மௌனிபாணி, தி. ஜா. பாணி ஜெயகாந்தன் பாணி மாதிரி ஈழத்து படைப்பாளிகளில் சாந்தனின் பாணி இப்படித்தான் இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், ஒன்றை மிகத் தெளிவாகச் சொல்லித்தான் தீர வேண்டும்; இயந்திரத்தனமான இந்த வாழ்வில் சுருக்கமுள்ள - குறுகிய வடிவத்திலான படைப்புக்களே அதிகமாக வாசிப்பிற்கு உள்ளெடுக்கப்படுகின்றன.

இது சமீபகாலயதார்த்தம்; இந்த யதார்த்தத்தை நூலாசிரியர் புரிந்து விட்டாரோ தெரியவில்லை;

56 பக்கங்கள் கொண்ட ஒரு தொகுப்பில் 15 கதைகள் இடம்பெறச் செய்திருப்பதே ஒரு சாதனைதான்;

இங்கே இன்னொன்றும் முக்கியமாகச் சொல்ல வேண்டும். இதில் உள்ள படைப்புக்களைப் பற்றி மட்டும் சொன்னால் போதாது என்ற நோக்கில் வேறு ஒன்றைக் கட்டாயம் சொல்லித்தான் ஆகவேண்டும்;

இந்த மண்ணில் ஒரு மகத்தான விடுதலைப் போராட்டம் நடைபெறுகிறது. ஒடுக்கப்பட்ட இந்த தமிழ் இனம் அளப்பரிய சாதனைகளை பெற்று வருகிறது; விடுதலையை நோக்கிய பயணத்தில் பல துயரங்களையும் இந்த இனம் சந்தித்துள்ளது:

இந்த நிலையில்-

ஆக்கிரமிப்பாளனின் - நேரடியான கொடூரம், இன அழிப்பு, இனத்தின்விடுதலைத் தாகம், போராடும் எழுச்சி இவை பற்றி ஏன் சாந்தன் இத் தொகுப்பில் பெரிதாக ஒரு கதையைத்தானும் சேர்க்கவில்லை? என்ற கேள்வி எழத்தான் செய்கிறது;

"சாந்தன் மண்ணின் புழுதியில் கால்கள் படிய வழிநடந்து செல்லுகிறார். உடன்- அயற் சூழலைக்காண அஞ்சியோ, கூசியோ கண்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

- வவுனியா திலீபன்

## சிறுகதை

# "மண்ணை மறந்தவர்கள்"...

யோ. யோன்சன் ராஜ்குமார்

காலையில் கடிதக்காரனின் பெல்சத்தம் அடுப்படியில் நின்ற கமலினியை ஓடி இளைக்க வர வைத்தது. அன்று வெளிநாட்டுக் கடிதங்கள் விநியோகிக்கப் படுமென முதல் நாள் பத்திரிகையில் பார்த்ததின் பிரதி பலிப்பு அவள் பதற்றத்துக்கு காரணம்.

எத்தனையோ நாட்களாக அவள் நந்தனின் கடிதத்தை எதிர்பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தாள்.

எத்தனையோ கப்பல்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. ஆனால் கடிதம்...

ஆரம்பத்தில் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்த கடிதம் பின்னர் படிப்படியாக குறைந்து இப்போ ஆறு மாதங்களுக்கும் மேலாக அவன் வார்த்தை வரிகளுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்.

'அவருக்கு வேலைக் கஷ்ரமாயிருக்கும் நேரமில்லாமல் இருந்திருக்கும்' பலவாறாக தன்னைத் தேற்றிக் கொண்டிருந்தாள். ஆனால்,

அன்றும் ஏமாற்றம் தான்; சந்தா கட்டப்பட்ட சஞ்சிகை தான் அன்றைய வரவு. அது மட்டும் கட்டிய பணம் முடியும் மட்டும் மறக்காமல் வந்து கொண்டிருந்தது. ஆனால் நந்தன்......?

......அன்று அந்த தனியார் நிறுவனத்தில் அவள் ஒரு ரைப்பிஸ்ற். அங்கு அடிக்கடி வரும் நந்தன், அவன் வருகையினால் ஏற்பட்ட தொடர்பு, அதனால் வந்த உறவு மூன்று வருடங்கள் கட்டுப்பாட்டோடு கண்ணியமாய் நடந்த காதல் ... அந்தப் பசுமை நினைவுகள். அப்போ... அவளும் ஒரு புத்தகப் பைத்தியம்... அவனும் தான், அதனால் தான் அவர்கள் உறவு அவ்வளவு பலமாக இருந்தது.

அவர்களின் பேச்சுக்கள் அனேகமாக நூல்களின் விமர்சனங்களாகத்தான் இருக்கும் அதுவும் மணிக்கணககாய், ஆயினும் கருத்து வேறுபாடுகளும் சிலவேளை ஏற்பட்டு அது பொய்ச் சண்டையானதுமுண்டு. அன்று நந்தனும் அடங்காத நாட்டுப்பற்றுக் கொண்டிருந்தான், அவனையொத்த பலர் அப்போ, ஆயுத மேந்தத் தொடங்கிய காலம்-

''கமலி உன்னை நான் காணாமல் இருந்திருந்தால் இண்டைக்கு நிச்சயம் ஒரு போராளியாய் தான் போயிருப்பன்'' இவை அவன்அடிக்கடி சொன்ன வார்த்தைகள்;

இதுவும் அரசியல் வாதிகள் பேச்சுப்போல் அடிக்கடி அவன் கூறிய கூற்றுக்கள். எந்தளவுக்கு வெளிநாட்டு வாழ்க்கையை அவன் வெறுத்தானோ,வெளிநாட்டுக்குப் போனவர்களை ஏசினானோ, அந்தளவுக்கு இன்று ஐந்து வருடம் அன்னிய தேச வாழ்க்கையில் மூழ்கி விட்டான்.

—அன்று நந்தனின் வீட்டாருக்கு கமலினியின் தொடர்பு தெரியவந்தது, அங்கு பெரிய பூகம்பமே வெடித்து இறுதியில் நந்தனின் உறுதியின் முன்னாலும், அவன் ஒரே தங்கை மனோஜினியின்பெருவிருப்பின் பேரிலேயும்அவர்சுள் பணிந்து, 'நந்தன் கமலி திருமணம்' சிறப்பாக நடைபெற்றதும் கமலியின் மனதில் நிழலாடியது.

ஆயினும் நந்தனின் பெற்றோர் சீதனம் எதிர்பார்க்க, நந்தன் அதற்கு எதிராக எழுந்தும் ஒரே தங்கை மனோஜினியின் மணவாழ்வுக்கு சீதனம் சேர்க்க அவன் வெளிநாடுபோக ஒப்புக் கொண்டதும். அவள் கழுத்தில் மாலை விழுமுன்னர் ஏற்பட்ட ஒப்பந்தம்.

அவளே சற்றுப் பயந்திருந்தாள் அவனது போக்கு வித்தியாசமானதாய்த்தான் இருந்தது அன்று.

''கமலி சொந்தமாய் எங்களுக் கொரு நாடு வேணும்- எங்கட இனம் தனித்துவமானது. எங்கட எழுத்தாளர்கள், கலைஞர்கள் கௌரவிக்கப்படவேணும். நாங்கள் ஆரெண்டதை இவங்களுக்கு காட்டத்தான் வேணும்; நீ இருந்து பார் கமலி, எங்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேணும்' ஒரு வருஷத்தில சிங்கப்பூரை விட யாழ்ப்பாணம் வளர்ந்திடும்''.

சொந்த மண்ணில் எவ்வளவு பற்றுக் கொண்டிருந்தான். ஆனால் இன்று......? ''கமலி! வெளிநாட்டுக்குப் போறவங்களெல்லாம், தமிழை, தாயை மறந்தவங்கள். இண்டைக்கு எத்தின எங்கட நாட்டு மூளைசாலிகள் அன்னிய நாட்டை வளம்படுத்தி அலங்கரிச்சுக் கொண்டிருக்கிறார்கள்.''

கொடுத்த வாக்கைக் காக்க தங்கையின் விருப்பம் இன்றியே தங்கையின் எதிர்காலத்துக்காய் மணம் முடித்து மணம் மாறாத ஆறு மாதத்தில் அன்னிய நாட்டுக்குச் சென்றதும் பழையகதைகள்...

''அம்மா''... ஓடிவந்த றூபாவை தூக்கி கமலி அந்த பிஞ்சு முகத்தில் தன் அதரத்தைப் பதித்து ''இண்டைக்கு நேசறியில என்னம்மா படிச்சனியள்'' ''எமது குடும்பம்!'' 'அம்மா எங்கட அப்பா எப்பையம்மா வருவார்?' அந்தப் பிஞ்சுக்கு அன்றாடம் பாடமாகிவிட்ட வார்த்தையது. ஏனெனில் அவள் அப்பா முகம் அறியாதவள்.

நந்தன் வெளிநாடு போகும் போது அவள் ஆறுமாதக் கரு- இன்று பிறந்து ஐந்து வருடமாகியும் அப்பா முகம் தெரியாது.

''இந்த நந்தனுக்கு ஏன் தான் இந்தப் பிள்ளைப்பாசம் கூட இல்லாமல் போச்சு'' பனித்த கண்களை கசக்கியவள் பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்கும்பணிக்காய்உடனே ஓடுகிறாள்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த ரேகா திடீரென ''அம்மா நான் இண்டைக்கு அன்ரா மாதிரி ஒரு அக்காவைக் கண்டனான்.'' ''என்ன அன்ரா மாதிரியா?''

நிமிர்ந்து பார்த்தாள் கமலி; அங்கே போட்டோவில் அழகாகச் சிரித்துக்கொண்டிருந்தாள் மனோஜினி.

நந்தன் யாருக்காக வெளிநாட்டுக்குப்போக நினைத்தானோ, யாரை வாழவைப்பது பெரிதென அன்னியதேசம் சென்றானோ? அவள்...

இந்ததேசம் வாழவேண்டும் என்றநோக்கில் காலமிட்ட கட்டளையை தலைமேற் கொண்டு தன்னை இந்த தேசத்துக்கே கொடுத்துவிட்டாள் அவள் தீபமாகமுன் கடைசியாக சொன்ன வார்த்தைகள்-

''அண்ணி எங்கட அண்ணாவுக்கு உண்மையிலேயே விசர்தான். நான் அப்பவே சொன்னனான் நீ வெளிநாட்டுக்குப் போகவேணாமெண்டு, சும்மா ரோசத்தில வெளிக்கிட்டவர் இப்ப வெளிநாட்டை மறக்கேலாமல்கிடக்குதுபோல இதைவிட ஆயுதமேந்தி போராளியாகவே செத்திருக்கலாம்''.

நந்தன் முன்பு சொன்ன வார்த்தைகள் ''கமலி உம்மை நான் காணாமல் இருந்திருந்தால் நிச்சயம் ஒரு போராளியாய்த்தான் போயிருப்பன்',.

அவன்கூறியதுவெறும் வார்த்தைகள்தான் அதை நிஜமாக்கியவள் கமலிதான்.

மண்பற்றுக் கொண்டவன் போல் பேசிய நந்தன் இன்று பிள்ளைப்பாசம் கூட இல்லாமல்...?

வெளிநாடு போனவுடன் மாதத்திற்கு 3 கடிதம், பின் 2 ஆகி, 1 ஆகி... மனோஜினியின் வீரப்பிரவேசத்துடன் மிகக்குறைந்து அவள் வீரச்சாவின் பின், எதுவுமில்லை.

ஆனால் அவள் காதுபட ஊரவர்கள் கூறியசெய்திகள்; ''இவள் கமலியின்ர புருஷன் அங்க வெளிநாட்டில வேற ஒருத்தியோட தொடர்பாம். அவன் இனிவரரான்'' வெந்த புண்ணில் வேலாக அடிக்கடி பாயும் வார்த்தைகள்.

'நந்தன் அப்பிடிப்பட்டவனில்லை அவன் வருவான்......'' அவள் தன்னைத்தேற்றிக் கொண்டு ஊமையாக அழுது கொண்டிருந்தாள். இப்படி எத்தனை அபலைகளோ... வெளிநாட்டு வாழ்க்கையில்,

சில கால ஓட்டத்தின் பின்......

அன்று பொழுது விடிந்ததும் கிணற்றடியில் காகம் வரவொன்றை கூறி நின்றது. கமலியின் மனதில் சின்னதாய் ஒரு பயத்துடன் கூடிய மின்னல் கீறு. 'நந்தன் சிலவேளை வருவானோ'' அவள் உள்ளம் இனம்புரியாமல் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

......இன்று ஏதோ......... எண்ணியவள் எண்ணம் மறையும் முன் 'டிங் டிங்' வாசலில் தபால்காரன்...... அதுவும் வெளிநாட்டுக் கடிதத்துடன்......காற்றாய்ப் பறந்தவள் வாங்கிய கடிதத்தை பரபரக்கப் பிரித்தாள், அவள் இத்தனை நாள் எதிர்பார்த்த கடிதம். ஆனால் எதிர்பாராத செய்தியுடன்.........

கடிதத்துடன் அவன் போட்டோவும் இத்தனை காலத்துக்குப்பின் அனுப்பிய ஒரே ஒரு போட்டோ. கண்ணை வெட்டாது சிறிது நேரம் அவள்அதில் மூழ்கிகண்கள் பனிக்க கடிதத்தை தொடர்கிறாள்.

''அன்பின் கமலி! இத்தனை காலம் கடிதம் போடவில்லை என்று நீ எத்தனை வேதனைப்பட்டிருப்பாய். என் ஆசை மகள் றூபாவுக்கு என் ஆசை முத்தங்கள். உங்களைப்பார்க்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போகிறதே என்று தான் என் வேதனை! வெளிநாட்டில்இருந்துநான்வரையும் கடைசிக் கடிதம் இதுவே. கமலி வெளிநாட்டு வாழ்க்கை போலியானது, போதையானதும்கூட, எவ்வளவு உறுதியுடன் ஒரு வருடத்தில் திரும்புவேன் என சென்ற நான்மீள முடியாமல் போனது பார்த்தாயா! உங்களுக்கும், எங்கள் சொந்த மண்ணுக்கும் நான் செய்த துரோகம்எத்தனைபிறவிஎடுத்தாலும் மறையமுடியாது.

கமலி உன் மனதைத் தேற்றிக் கொள். நான் இங்கு வந்து இந்த சூழலுக்குப் பழகி மது, மாது இவை எல்லாவற்றையும் துணையாக்கிக் கொண்டதன் பிரதிபலிப்பு இன்று நான் ஓர் நோயாளி

உன் மனதை இன்னும் தேற்றிக் கொள்.

நான் இலங்கைக்குத் திரும்பப்போவதே இல்லை. என் மேல் சந்தேகபடாதே......... நான் ஒரு 'எயிற்ஸ் நோயாளி.'

''ஐயோ... நந்தன்'': அவள் இதயம் விம்மியது.

''என் தங்கையைப் போல் ஆயிரமாயிரம் வீரர்களால் புனிதமான எம் மண்ணில் அருவருக்கதக்க உயிர் கொல்லியுடன் நான் எப்படி வருவேன்? எத்தனையோ தடவை அங்குவர நினைத்தேன்... பின்னர் விரும்பவில்லை.

நான் ஒரு நோய் காவியாக வந்து எம் மண்ணில் இந்த உயிர்கொல்லியைப் பரப்ப விரும்பவில்லை. அன்னிய தேசத்தில் தேடிய அசிங்கம் இங்கேயே அழியட்டும்.

இன்னும் உன் மனதைத் தேற்றிக்கொள். இந்தக்கடிதம் உன்கையில் கிடைக்கும் போது, உயிரற்ற என் சடலம் மின் தகனத்தில் வெந்து கொண்டிருக்கும்.

கமலி நான் கூறும் கடைசி வார்த்தை எம்மவர்கள் (நான் உட்பட) அன்னிய தேசத்தை வளம்படுத்தி தாங்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு நானே ஒரு நல்ல பாடம்...என்மகள்...றூபாவை நாட்டுப் பற்று மிக்கவளாக வளர்க்கவேண்டியது உன் பொறுப்பு... என்னை நினைக்காதே... நான் சொந்த மண்ணுக்கே துரோகி!

இப்ப...
நந்தன்

கமலியின் இதயம் ஒருகணம் நின்று மீண்டும் துடித்துக் கொண்டிருந்தது. அங்கே றூபா மணல்மேல் 'சென்றிப் பொயின்ற்' கட்டி விளையாடிக்கொண்டிருந்தாள்.

## விழுந்தும் எழும்புவோம்

காலையில் கண்விழிக்க
கதறல்கள் ஒலிக்கும்
மாலையில் கண்மூட
மனம் இங்கு மறுக்கும்
சாலையில் போனவரும் - ஷெல்
சாவுடன் சங்கமிக்க
சோலையில் குயில்கூட
சோககீதம் இசைக்கும்;

ஏணையுள் படுத்திருந்த
எட்டுமாதக் குழந்தையும்
பானையுள் வேகவைத்த
பச்சையரிசிச் சோறும் - அவன்
ஆணையால் அநியாயமாய்
அழிக்கப்பட்டுப் போவதால் - தமிழ்
வீணைகூட வேதனையால்
வெந்து தமிழ்க் கீதம் இசைக்கும்;

பாதுகாப்புத்தேடி பார்வதி அக்கா
பிளாற்றுக்குக் கீழ் படுத்திருக்க
சாதுவழி வந்தவர்கள் செஞ்சிலுவைக்குக் கிட்ட
செல்லடிக்க மாட்டாரென்று செல்வி அக்கா செல்ல
கோதுகூட மிச்சமின்றி கொலைகாரக் கூட்டத்தால்
கொன்றழிக்கப் பட்டதினால்
காதுகூடச் செவிடாக்கும் கதறல்கள் ஒலிக்க
கண்ணீரால் தமிழ் நனையும்,

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்
வேலை இங்கு நடந்தாலும்
மந்தையைப் போல எம்மை - அவன்
மேய்த்துவிட நினைத்தாலும்
சிந்தையே இழந்தாலும் செத்தொழிந்து போனாலும்
விடியலைத்தேடி இங்கு விழுந்தும் எழும்புவோம்;

செல்வி. ச. சாந்தினி

# உலக உதைபந்தாட்டப் போட்டியில் மாரடோனா கலந்து கொள்வாரா?

டியாகோ மாரடோனா- கால்பந்து விளையாட்டில் மறக்க முடியாத பெயர் இது. அர்ஜென்டினா நாட்டுக்கு 1986-ம் ஆண்டு உலக கோப்பையை பெற்றுத்தந்து பெருமை சேர்த்தவர்.

பிரேசில் நாட்டு வீரர் பீலேவுக்கு அடுத்து கால்பந்து விளையாட்டில் ரசிகர்களை கவர்ந்தவர் மாரடோனாதான். 18 வருடங்களாக அர்ஜென்டினா நாட்டுக்காக கால்பந்து விளையாடிவரும் மாரடோனா 3 தடவை உலக கோப்பைப் போட்டிகளிலும் ஆடிவிட்டார்.

இந்த முறையும் அவர் அர்ஜென்டினா அணியில் இடம் பெறுவார் என்றே எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் இந்த நம்பிக்கை மாரடோனா விடம் அறவே இல்லை.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களாக அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வருகின்றன

1991-ல் போதைப்பொருள் வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டதோடு கால்பந்து விளையாட அவருக்கு 15 மாத தடையும் விதிக்கப் பட்டது நினைவிருக்கலாம்

சமீபத்தில் பத்திரிகையாளர்கள் மீது துப்பாக்கியால் மாரடோனா சுட்டதாகவும், அதில் குண்டின் துகள்கள் ஒரு பத்திரிகையாளர் மீது பட்டதாகவும் ஒரு வழக்கு அவர்மீது தொடரப்பட்டுள்ளது இதனால் அவர் அர்ஜென்டினா நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

இதுபோன்ற பல சம்பவங்கள் அவரது மனதை நிம்மதியிழக்கச் செய்திருக்கின்றன என்பது உண்மை. மேலும் கால்பந்து விளையாடும் போது மாரடோனா அடிக்கடி காயமடைந்து விடுகிறார் இதனால் பல நேரங்களில் விளையாடமுடியாமல் போய் விடுகிறது.

இப்போது அர்ஜென்டினா கால்பந்து அணியில் அவருக்கு இன்னொரு பிரச்சினையும் காத்திருக்கிறது. அர்ஜென்டினா அணியில் உள்ள வீரர்கள் அனைவரும் அவரைவிட 10 வயது குறைந்தவர்கள். மாரடோனாவுக்கு 33 வயதாகிறது.

மாரடோனாமீது பலமான நம்பிக்கை இருந்தாலும்கூட இளம் வீரர்களுடன் விளையாடும்போது பழைய திறமையை அவரால் காட்ட முடியுமா என்று தயங்குபவர்களும் உண்டு. இதுபற்றி மாரடோனா கூறும்போது, "அமெரிக்காவில் நடக்கும் உலக கோப்பை கால்பந்து போட்டியில் என்னால் கலந்து கொள்ள முடியுமா என்று எனக்கே தெரியவில்லை. எனக்கு இப்போது 33 வயதாகிறது. நான் 50 வயது வரை விளையாடுவேன் என்று எதிர்பார்க்க முடியுமா என்ன?" என்று நியாயமான கேள்வியை கேட்கிறார்.

ஆனால் அர்ஜென்டினா நாட்டு கால்பந்து அணியின் பயிற்சியாளர் அல்பியோ பசிலி மாரடோனா மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருக்கிறார். அமெரிக்காவில் யூலைமாதம் தொடங்கும் உலக கால் பந்து போட்டியில் அர்ஜென்டினா அணியில் மாரடோனா இருந்தால்தான் முன்பு போல அந்த அணிக்கு வெற்றி வாய்ப்பு அமையும் என்று பயிற்சியாளர் பசிலி உறுதியாக நம்புகிறார். "மாரடோனாதான் அர்ஜென்டினா அணிக்கு கப்டன் அவர். எந்த நிலையில் இருந்தாலும் பயிற்சிக்கு வருவார் அவர் தொடர்ந்து விளையாடுவர்" என்றுகூறுகிறார். மாரடோனாவுக்கும் இரண்டு மனது ஒருபுறம் மீண்டும் ஆடவேண்டும்என்று நினைக்கிறார். அவரது தலைமையின் கீழ் உலக கோப்பையை தனது அணி சுவைத்ததை அவர் மறக்கவில்லை. எனவே மீண்டும் ஆடுவதில் தவறில்லை என்று நினைக்கிறார்.

ஆனால் மறுபக்கம் நான் எழுந்திருக்க முயற்சிக்கிறேன் ஆனால் அடிக்கடி ஏற்படும் காயங்களை நினைத்தால் எங்கே ஆட முடியாமல் போய்விடுமோ என்று பயமாகவும் இருக்கிறது என்கிறார்.

உலககோப்பை தொடங்க இன்னும் 4 மாதங்கள் இருக்கிறது. அதற்குள் மாரடோனா என்ன செய்யப் போகிறார் என்பது தெரிந்து விடும்.

## காலங்கள்

இறுக மூடிக் கொள்ளும் பழக்கம் அவரிடம் இல்லை! என்று முருகையன் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதைப்போல. சாந்தன் உறுதியானவர். இன்னும் இந்தமண்ணிற்கான இலக்கியங்களை அவர் படைப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

மேற்குலகில் இருந்து இந்த மண்ணைப் பற்றிய தப்பான செய்திகளை மட்டும் கிரகித்துக் கொண்டு, அதை புதிய செய்திகளாக திரிவு படுத்திக் கொண்டு தாம்தான் இலக்கிய 'ஜாம்பவான்கள்' என்று சொல்வோருக்கு சாந்தனின் பணியை நாம் சொல்லித் தான் தெரிய வேண்டும் என்றில்லை

இந்த மண்ணின் உணர்வுகளைச் சொல்லும் படைப்பாளிகள் எம்மிடம் நிறையவே உண்டு அதில் சாந்தனும் ஒருவர்.


# திருமண அழைப்பு மடல்

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக ஆண்டு பங்குனி மீ 6ஆம் நாள் (19 - 3 - 94) சனிக்கிழமை பகல் 11 56 — 1. 32 வரை வரும் மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**ரவீந்திரன்**
(குட்லக் எம்போறியம்) பருத்தித்துறை
அவர்களுக்கும

எமது புத்திரி திருநிறை செல்வி
**சுஜநாஜினி**
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று மணமகளில்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
து. கிருஸ்ணசாமி
(லக்ஷ்மி பவன்)
2-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை,

திரு. திருமதி
ச. குலேந்திரன்
அம்மையார் தோட்டம்
உடுவில் கிழக்கு
சுன்னாகம்,

(7771)



Cake Icing and Hair Dressing
(கேக் ஐசிங்) உம் (சிகை அலங்காரம)

## பயிற்சி நெறிகள்

ஆரம்பம்: 19-03-1994

விபரங்கட்கு:

***North Ceylon Technical Institute***
**14, St. Peter's Lane, JAFFNA.** (இ-8839)


# செப்டிசீமியா

## சில குறிப்புகள்

தற்போது யாழ் மாவட்டத்தில் பலவிதமான நோய்கள் பிள்ளைகளைத் தாக்கி வருகின்றன. நெருப்புக் காய்ச்சல், மலேரியா போன்றவை ஒருசிலவாகும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கைத்தரமும், பொருளாதாரமும் குறையும் போது இது போன்ற நோய்களின் தாக்கமும் அதிகமாக இருக்கும்.

நெருப்புக்காய்ச்சல் பக்டீரியா, வைரஸ் கிருமிகள், மலேரியா கிருமிகள் போன்ற கிருமிகள் ஒரு பிள்ளையைத் தாக்கும் போது பலருக்கு நோயின் தாக்கம் சாதாரண அளவில் இருக்கும் துரதிருஷ்டவசமாக இந்த நுண் கிருமிகள் இரத்தத்தில் அதிவேகமாகப் பெருகி பல உறுப்புகளைத் தாக்கும் போது உண்டாகும் பிரச்சினையே செப்டிசீமியா ஆகும் இந்தத் தாக்கம் மூளை நுரையீரல், இருதயம், கல்லீரல் குடல், சிறுநீரகம் போன்ற உறுப்புகளில் ஏற்படுகின்றது அவயவங்களிலுள்ள நுண்ணிய இரத்தக்குழாய்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன இதனால் இழையங்களுள் இரத்தக் கசிவு ஏற்படுகின்றது.

இப்பொழுது ஒவ்வொரு உறுப்பும் செப்டிசீமியா தாக்கத்தால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதைப் பார்ப்போம். செப்டிசீமியா மூளையைத் தாக்கும்போது. மூளையுள் இரத்தக் கசிவு ஏற்படுகிறது இதனால் மூளையின் பல பகுதிகளுக்கு இரத்தச் சுற்றோட்டம் குறைந்து பிராணவாயு பற்றாக்குறை ஏற்படுகிறது இதன் அறிகுறியாக சோர்ந்திருத்தல் (Drowsinss) அந்தரப் படுதல் (Restlessness), வலிப்பு (Fits) மயக்கநிலை போன்றவற்றை அவதானிக்கலாம். சுவாசக் குழாயையும் நுரையீரலையும் தாக்கும் போது இருமல். சளி போன்ற குணங்களோடு மூச்சுத் திணறலும் ஏற்படலாம் இதயத்தைத் தாக்கும்போது அதிவேகமான இருதயத் துடிப்பு மூச்சுத்திணறல் ஏற்படலாம். குடலைத் தாக்கும் போது இரத்தக் கசிவு ஏற்பட்டு இந்த இரத்தம் கறுப்பு நிறமாக மாற்றமடைந்து கறுப்பு வாந்தியாகவோ அல்லது கறுப்பு நிற மலமாகவோ வெளியேறுகின்றது ஈரல், குடல், சிறுநீரகம் போன்ற அவயவங்கள் தாக்கப்படும் போது தாங்க முடியாத வயிற்று நோ ஏற்படுகின்றது தசைநார்களில் தாக்கம் ஏற்படும் போது தாங்க முடியாத நோ, உளைவு, தசைப்பிடிப்பு போன்றவற்றை அவதானிக்கலாம்.

எப்பொழுதும் எல்லா அவயவங்களும் தாக்கப்படுவதில்லை பல அவயவங்கள் ஒரே நேரத்தில் கடுமையாகத் தாக்கப்படும் போது மரணம் சம்பவிக்கலாம். ஆனால் பல உறுப்புக்கள் தாக்கமடையமுன்பு உரிய நேரத்தில் சிகிச்சையை ஆரம்பித்தால் இந்த மரணங்களை சம்பவிப்பதைத் தவிர்க்கலாம்.

பின்வருவன அபாயத்தைக் குறிக்கும் அறிகுறிகளாகும்:

1 சோர்ந்திருத்தல் 2. அந்தரப்படுதல் 3. கறுப்பு நிறமலம் வெளியேறுதல் 4 மூச்சுத் திணறல் 5. சளியோடு கூடிய இருமல் 6 தாங்கமுடியாத வயிற்றுநோ 7 கடுமையான தசைநார் நோ, தசைப்பிடிப்பு 8, கடும் காய்ச்சல் 9. மயக்க நிலை 10. வலிப்பு

மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் காய்ச்சல் இல்லாவிட்டாலும்கூட தகுந்த வைத்திய ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியமாகும் இவ்வாறாக சமுதாயத்தில் செப்டிசீமியாவைப் பற்றிய அறிவும் விழிப்புணர்ச்சியும் இருந்து உரிய காலத்தில் தகுந்த சிகிச்சை பெற்றால் தேவையில்லாத பல மரணங்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.


யாழ் நகரில்
உங்கள் படத்தேவைகளிற்கு

**உதயம் ஸ்ருடியோ**
(நிழற்படக் கலையகம்)

- திருமணம், பூப்புனித நீராட்டு விழா
- பிறந்தநாள் மற்றும் உங்கள் மனதை விட்டு அகலா நிகழ்வுகள், மற்றும்
- வெவ்வேறு அளவுகளிலான பாஸ்போர்ட்
- தபால் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை
- போஸ்காட் படங்களை உடனுக்குடன் பெற்றிடவும் மற்றும்

மாவீரர், பொதுமக்களின் கலர் கறுப்பு-வெள்ளைப் படங்களை பெரிதாக்கி கொடுப்பவர்கள்

V

# உதயம் ஸ்ருடியோ

(நிழற்படக் கலையகம்)
அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(இ- 8855)

# சிங்களமயமாகும் திருமலை

வட-கிழக்கு மாகாணத்தின் அதாவது தமிழ்பேசும் மக்களின் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை இன்று அத்தன்மையை படிப்படியாக இழந்து ஒரு பௌத்த பிரதேசமாக மாற்றமடைந்து வருவதையே அங்கு நடைபெறும் செயற்பாடுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

வடக்கே மாஓயாவையும், மேற்கே அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களையும், தெற்கே வெருகல் ஆற்றையும் எல்லைகளாகக் கொண்ட இம் மாவட்டம் 2630 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகவும் மீன்பிடியையும், விவசாயத்தையும் தனது பிரதான தொழில்களாகக் கொண்டது. இவ்வாறான தன்மைகளுடன் காணப்படும் இம் மாவட்டத்தின் இன்றைய உண்மை நிலை இம் மாவட்டத்தில் உள்ள மக்களும், திருமலை நகரமும் துண்டுதுண்டாக சிங்களக்குடியேற்றங்கள் மூலம் உடைக்கப்பட்டும் இராணுவ முகாம்கள் மூலம் சூழப்பட்டுமே காணப்படுகின்றன.

கொழும்பிலிருந்து திருமலையை நோக்கிப்பிரயாணம் செய்யும் போது பொலநறுவை மாவட்ட எல்லையில் இருந்து திருமலை நகர எல்லைவரை அனைத்துக் கிராமங்களும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களாகவே காணப்படுகின்றன. இடையிடையே காணப்படும் தமிழ் முஸ்லிம் கிராமங்களைக் கூட சிங்களமயப்படுத்தப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்க்கிராமமான தம்பலகாமம் அது தம்புலுகமுவ என்று தமிழிலேயே எழுதப்பட்டு காட்சியளிக்கின்றது.

மாகாணசபை அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்ட காலம் தொட்டே திருமலையைச் சிங்களமயமாக்கும் முயற்சியில் அரச வெளிப்படையாகவே ஈடுபட்டு வந்துள்ளது என்பது நாடறிந்த உண்மை. 1971இல் 29 வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1981-ல் 34 வீதமாக அதிகரித்திருப்பதில் இருந்து இதை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். தற்போது ஒரு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டால் நிச்சயமாக சிங்கள மக்களின் தொகை 45 வீதம் முதல் 50 வீதமாகக் காணப்படும். திருகோணமலை சகல இன மக்களுக்கும் உரிய பூமி என்று கூறிக்கொண்டே இவ் அரசு அனைத்தையும் செய்து வருகின்றது. கண்துடைப்புக்காக பல்லின சங்கமம் என்னும் மாதிரிக் கிராமத்தையும் அமைத்து அதில் மூவின மக்களை குடியமர்த்திக் கொண்டும் அதேவேளையில் திருக்கடலூர் கிராமத்தின் வடக்குப்புறத்தில் உள்ள பிரச்சினைகளால் அகதிகளாக இடம்பெயர்ந்து இந்தியா சென்ற தமிழர்களின் வீடுகளில் சிங்கள மக்கள் அவசர அவசரமாகக் குடியமர்த்தப் படுகின்றார்கள். அதேசமயம் அதேவேகத்தோடு பௌத்த விகாரைகளும் திருமலையில் புதிது புதிதாக ஏற்படுத்தப் படுவதையும் ஊன்றிக்கவனித்தால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான நிலைமைகளோடு நிர்வாகரீதியிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தமிழ் பேசும்மக்கள் அதிகமாக வாழும் திருமலை மாவட்டத்திற்கு சிங்கள அரசாங்க அதிபர் ஒருவர் ஏற்படுத்தப்பட்டதில் ஆரம்பித்து பின்பு வேறு மாவட்டங்களின் எல்லையில் காணப்பட்ட சிங்களக் கிராமங்களை திருமலை மாவட்டத்துடன் இணைத்து சிங்களவர்களுக்கென தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்தகட்ட நடவடிக்கையாக மீன் பிடித் தொழில் அமைச்சை திருமலைக்கு இடமாற்றம் செய்ததனூடாக கரையோரங்களில் சிங்கள மீனவர்களை மேலும் குடியமர்த்தி இறுதியாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்டு தற்போது அரசினாலேயே ஆளுநருக்கூடாக ஆட்சி செய்யப்படும் வட-கிழக்கு மாகாண சபையில் உள்ள அமைச்சுகளின் செயலாளர்களையும் சிங்களவர்களாக நியமிப்பதில் முடிவடைந்துள்ளது.

இங்குள்ள தமிழ் மக்கள் கூட தங்களுடைய குரலை வெளிப்படுத்துவதற்கு சரியான வழிமூலங்கள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இந்நிலையில் திருமலை தமிழ் மக்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபடுவதற்குக்கூட அஞ்சுகின்ற நிலையே காணப்படுகின்றது. புண்ணிய பூமியாகக் கருதப்பட்ட இந்த இடம் தற்போது பௌத்த விகாரையையும் சிங்கள மக்களுக்கான கச்சேரியையும் இராணுவ முகாமையும் கொண்டபிரதேசமாக மாற்றியமைத்து தமிழ் மக்களே அங்கு செல்லமுடியாத நிலை உருவாகியுள்ளது.

## தமிழ் தெரியாத தமிழர்கள்


இந்தோனேசியாவில் 4000 தமிழ்க் குடும்பங்கள் தமது தாய்மொழியான தமிழைப் பேச முடியாதவர்களாய் உள்ளனர். தற்பொழுது வீடுகளில் தமிழில் பேச சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அங்கு குடும்ப வழிபாடு, வீட்டுவழிபாடு, கூட்டு வழிபாடு என்பனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் மதத்திற்காக அரசாங்கம் தமிழ்க் கல்வியை வரவேற்கிறது. முன்பு அங்கு 25 தமிழ் அறநெறிப் பாடசாலைகள் இருந்தன. இப்பொழுது அங்கு ஐந்து பாடசாலைகளே இயங்கிவருகின்றன. இதில் மூன்று வயது தொடக்கம் ஏழு வயதுடைய பிள்ளைகளே பயில்கின்றனர். ஏழாவதுவயதிற்கு பின்பே அங்குள்ள பாடசாலைகளில் அனுமதி பெறமுடியும்.

தலைநகரில் பிரமாண்டமான மாரியம்மன் கோயிலும் தண்டாயுதபாணி கோயிலும் இருக்கின்றன. அவற்றைச் சூழ 40க்கும்மேற்பட்ட மாரியம்மன் கோயில்கள் இருக்கின்றன. அங்குள்ள கோயில்கள், மக்கள் வழிபடச் செல்வது குறைந்தளவிலேயே உள்ளது.

இந்தோனேசியாவில் சீதனம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் மொறிஸ்**

(சண்முகம் தவராசா)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 21.03.1972 | 20-03-1991 |

திதி: 18-03-94

வெள்ளை உள்ளம் கொண்ட வெள்ளைவத்தவமே
தமிழ் மண்ணைக் காக்கவென சளைக்காது
வீறுகொண்ட வேங்கையாய்
மாறு கொண்ட அரக்கரை
சிலாவத்துறைதனில் சிரம் வீழ்த்தி ஊறு கொண்ட
உன் உடலைத் தமிழ் மண்ணுக்காய் உரமாக்கி
மூன்றாண்டு காலம் போனதடா, ஆனாலும்
ஆறாது நம் மனது மாறாது உன் நினைவலைகள்.

மொறிஸ் வீதி,
இடைக்குறிச்சி,
வரணி,
(7782)

உன் பிரிவால் துடித்து துயருறும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்

அளவெட்டி, கும்பிளாவளை

## பிள்ளையார் கோவில் தொண்டர்சபை
## வருடாந்த
## பொதுக் கூட்டம்

மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்
**20.3.94 ஞாயிறு மாலை 2.30 மணிக்கு**
சபைத் தலைவர் திரு. வை. செல்லையா அவர்களின் தலைமையில் ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும், அத்தருணம் சபை அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்

தலைவர்
வை. செல்லையா

முக்கிய குறிப்பு
தொண்டர் சபை அங்கத்தவர்கள் 17-ம் 18-ம் திகதிகளில் மாலை 2 மணி தொடக்கம் 5 மணி வரை காரியாலயத்தில் தங்கள் அங்கத்துவ சந்தாவை செலுத்தி அங்கத்துவத்தை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.
(7775)

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல் எதிர் வரும் 22.03 94 (செவ்வாய்) காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

(7787) நிர்வாகம்

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

### பொதுக்கூட்டமும்
### புதிய நிர்வாகிகள் தெரிவும்

28-03-1994 திங்கட்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தமது வியாபார நிலையங்களை மூடிவிட்டு தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி
நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்
(7783)

## இரண்டாம் வருட நினைவலைகள்



மண்ணில்
27 – 05 – 1969

விண்ணில்
18 – 03 – 1992

**செல்வி சிவநாதன் தர்மவாணி (அமுதா)**

யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீட மாணவி

(1-ம் வருடம்)

நின்று நிலைக்குமே
நின் நீங்காத நினைவுகள்

பொன்னான மேனியிலே
பொல்லாத நாய் அடித்து—உன்
புன்னகையை நில்லாது விரட்டியதோ
எழிலான திருமுகமும் சிறப்பான சிந்தனையும்
நீண்ட முடியழகும்
நிழலாக மாறியதே—உன்
அன்பான உள்ளங்கள் என்றும் மறக்குமோ!
மனதினிலே என்றும் நின்று நிலைக்குமே
நின் நீங்காத நினைவலைகள்.

ஆனந்தா அவெனியு லேன்
உடுவில்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(7781)

# ஜெர்மனியில் இனவெறியும் ரொக் இசையும்

உலகம் உலகப் போர்களை மறந்து வருகிறது: அதனால் மிகமோசமாக பாதிக்கப்பட்டு மீண்டும் உலகில் போரே நிகழக்கூடாது என்று கனவு கண்டதலைமுறைமறைந்து வருகின்றது. போரால் மிக அதிகளவு பாதிக்கப்பட்ட மூன்று தேசங்களில்தான் பாசிசமும், இனவெறியும் புத்துயிர் பெற்று எழுந்துள்ளன என்பதை சரித்திரத்தின் நக்கலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாம் உலகப்போரில் கிட்டத்தட்ட இரண்டு கோடி குடிமக்களை இழந்தது சோவியத் ரஷ்யா. 1710 நகரங்களும், 70,000 கிராமங்களும் அழிந்தன. உலகில் முதல்முறையாக மீண்டும் பாசிஸ்டுகள் தேர்தலில் வெற்றி பெற்றது முன்னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த ரஷ்ய குடியரசில்தான் நிகழ்ந்துள்ளது. அடுத்த படியாக ஜெர்மனி, ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சம் குடிமக்களை இழந்தது: அங்கு போரில் வடுப்படாத ஊரே இல்லை; யூத இனத்தை அழிக்கும் முயற்சியில் இலட்சக்கணக்கான அப்பாவிகளை அழித்து, மனித நாகரிகத்திற்கு மிகப்பெரிய களங்கத்தை ஏற்படுத்தியபழியைப் பெற்றது அது. இன்று அங்கும் நாசிச இனவெறி தீர்மானமான குரலாக மேலெழுந்து வருகிறது. இத்தாலியும் பாசிசத்தின் முதல் விளைநிலம் என்ற பெருமைக்குப் பங்கமின்றி முன்னேறி வருகிறது.

ஹிட்லர் வழியாக பூரணமடைந்த யூதஎதிர்ப்பும், இனவெறியும், தேசிய வெறியும், 'வாக்னர்' என்ற இசைமேதை வழியாகவே ஜெர்மனியில் வேரூன்றியது என்பது வரலாறு. ஹிட்லரும் கோயபல்ஸும் இசையை ஒரு முக்கியமான பிரசார ஆயுதமாகவே பயன்படுத்தினர்; புதைக்கப்பட்ட டிராகுலா ஒருதுளி இரத்தத்தால் புதிய உயிர்பெற்று எழுவதுபோல நாசிசம் மேலெழுகையில் மீண்டும் இசையையே தன் ஆயுதமாகக் கொள்கிறது; இம்முறை ராக் இசை.

சில உதாரணங்கள் 'அபாயக்கரம்' என்ற இசைக்குழுவின் ஒரு பாடல். ''நாங்கள் ஒரு சக்தி! இது ஜெர்மனியை துப்புரவு செய்யும்''. 'கொதிப்புற்ற மக்களின் சீற்றம்' என்ற இசைக்குழுவின் ஒரு பாடல், ''அன்னியரைச் சிறையிடு! எங்கேனும் ஓரங்கட்டிவிடு! ஏன்முடியாது இவர்களை பாலைவனத்தில் வீசிவிட?'' 'இறுதி விடிவு' என்ற இசைக்குழுவின் பாடல் யூத அழிப்புக்காக ஹிட்லர் வடிவமைத்த வதை முகாம்களை மீண்டும் கொண்டுவர விரும்புகிறது. ''இவர்கள் தலையெடுக்காமல் அடி! தாக்கு! வீசு சிறைக்குள்! வதை முகாம்களில் முடக்கு! என்று அதன் பாடல் கூறுகிறது.

இதன் முளைநிலம் பிரிட்டன் என்று கூறப்படுகிறது: வறுமையில் வாடும் தொழிலாளர்களின் மைந்தர்கள் இதன் ஆதிகால உறுப்பினர்கள்: அதீத தொழில்நுட்பம் இவர்களுடைய கைத்திறமைகளைச் செல்லாக்காசாக மாற்றிவிட்டது: விளைவாக எதிர்காலமே இருண்டு போன இவர்கள் சமூகத்தின் மீதுமுழுமையான வெறுப்பைவளர்த்துக்கொண்டனர்; தங்களை குருவித்தலையர்கள் (Punks) என்று அழைத்துக்கொண்டனர். நீளமாக விசித்திர வடிவங்களில் வெட்டிவிடப்பட்ட சாயமிடப்பட்ட தலைமயிரே இவர்களுடைய அடையாளம். அராஜகமும் வன்முறையும் நிறைந்த வாழ்க்கை முறையும் அதற்கு போதையாக ராக் இசையும் இவர்களிடம் இருந்தது. மெல்ல இவர்கள் தேசிய இனவெறியர்களாக ஆனார்கள்; இவர்களின் பாதிப்பினால் 1970களில் மேற்கு ஜெர்மனியில் ஆறாயிரம் ஆதரவாளர்களைக் கொண்ட 'மழித்த மண்டையர்கள்' (Skin Heads) என்ற அமைப்பு உருவாகியது. ஜெர்மனியதேசிய இனவெறி அல்லது நாசிசத்தின் மறுபிறவி இதிலிருந்து தொடங்குகிறது

> "அன்றைய ஜெர்மனி இன்றில்லை எல்லாத் திசைகளிலிருந்தும் புகுந்துள்ளனர் வேறினத்தவர். விழித்தெழு ஜெர்மனியனே நாம் கூவுவோம் குரல் கொடுப்போம் வெளியேறு அன்னியனே என்று".

திருகாணி செலுத்தி (Screw Driver) இரக்கமற்றது. (No Remorse) என்றபெயரில் குறிப்பிடப்பட்ட பிரிட்டிஷ் இசைக்குழுக்கள்குருவித்தலையர்களின்இனவெறியின் வெளிப்பாடாகமாறின. 1985இல் 'ரத்தமும்கௌரவமும்' என்ற அதிகார பூர்வ பாசிச இசைக்குழு உருவானது; தங்கள் இசையைஇவர்கள் '01' என்று அழைத்தனர், பேரிரைச்சல் எழுப்பும் ஒலிகள், கூக்குரல்கள், வசைகள் ஆகியவற்றை கொண்டது இவர்கள் இசை; இவர்களின் பிரதான பாடகரான 'இயான் ஸ்டுவர்ட்' டின் பாடல்கள் வெள்ளை இனத்தவருக்கான போராட்டத்தையே கருவாகக் கொண்டிருந்தது. மிக விரைவாகஜெர்மனியில் இவைபரவி கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட பாசிச இனவெறி இசைக்குழுக்கள் உருவாகின.

இக்குழுவினரையும் இவர்களுடைய வெறிமிகுந்த பிரசாரத்தையும் முற்போக்கு சிந்தனைகளுக்கு எதிரான ஆயுதமாக தீவிர வலதுசாரிகள் பயன்படுத்தினர். புறக்கணிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் இப்படி வலதுசாரிப் பெரிய மனிதர்களின்ஆதரவும் அரவணைப்பும் கிடைத்தது. இவர்களுக்கும் உவப்பாக இருந்தது. இடதுசாரிகளைமட்டம்தட்டி பாடல்களை வெளியிடும் 'வாந்தி எடு' என்ற குழுவிற்கு தேசிய ஜனநாயக கட்சியினர் (நேஷனல் பார்ட்டி டெமாக்ராட்ஸ் -NPD) பின்னணி சக்தியாக விளங்கினர் என்பது இன்றுபட்டவர்த்தனமான செய்தி

1989இல் பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதானது இக்குழுக்களுக்கு மக்களின் பேராதரவையும், அதன்மூலம் புது உற்சாகத்தையும் அளித்தது. கிழக்கு ஜெர்மனியிலேயே பல இனவெறி இசைக்குழுக்கள் முளைத்து ஆதரவுபெற்றன. 1989 இல் மட்டும் இனவெறி இசை தட்டுகளின் விற்பனை 60% அதிகரித்ததாக தகவல்கள் உள்ளன. ஒவ்வொரு வருடமும் ஜெர்மனிஒருங்கிணைந்த நாளன்று அன்னிய இனத்தவர்க்கு எதிராக வன்முறைகள் நடப்பது வாடிக்கையாகிவிட்டது. 1991-ல் HUNEX என்ற ஊரில் லெபனானைச் சேர்ந்த இரு அப்பாவிப் பெண்கள் பெற்ரோல் குண்டு வீசிக்கொல்லப்பட்டனர்; விசாரணையின்போது குற்றவாளிகளான இளம் மழித்த மண்டையினர் 'ஜெர்மனிய பேரரசு' ஒருங்கிணைக்கப்பட்டதனை கொண்டாடும் வண்ணம் இதைச் செய்ததாகக் குறிப்பிட்டனர்;

அதே சமயம் இருஜெர்மனிகளும் இணைந்ததன் மூலம் உருவான குழப்பங்களும் இப்பாசிச எண்ணங்களுக்கு உரமாக அமைந்துள்ளன; ஜூலை 1991-ல் பெர்லினில் வெளிவந்த DRE TRGESSPIEGEL என்ற இதழ் தரும் புள்ளிவிபரத்தகவலின்படி கிழக்கு (முன்னாள் கம்யூனிச) ஜெர்மனி பகுதியைசார்ந்த இளைஞர்களில் 49வீதம் பேர் ஜெர்மனியை சாராத அனைவர் மீதும் கடும் துவேஷம்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது- இத்தனைக்கும் வெறும் 1,2வீதம் பேர்தான் கிழக்கு ஜெர்மனியில் வெளிநாட்டினர் உள்ளனர்;

இப்போக்குக்கான காரணங்களில் பிரதானமானது ஜெர்மனிகள் இணைந்த உடன் உடருவான மாபெரும் வேலையில்லா திண்டாட்டமாகும். இணைப்பை பிரதானமாக காட்டி பெரிய அளவு எதிர்பார்ப்புகளை அரசும் பத்திரிகைகளும் உருவாக்கியிருந்தன: ஆனால் கம்யூனிச அரசு அளித்திருந்த குறைந்தளவு உத்தரவாதங்களை கிழக்கு ஜெர்மனியினர் இழந்தது மட்டுமல்ல, மேற்கு ஜெர்மனியின் அதிதொழில் நுட்பத்தின் போட்டியையும் சந்திக்க நேர்ந்தது: இதன்விளைவான சீரழிவு இளைஞர்களை கோபக்காரர்களாகியது. வலதுசாரிகளால் இக்கோபம் 'அன்னியர்' மீது திருப்பிவிடப்பட்டது. ஜெர்மனியின் 'அழிவுக்கு காரணம் அன்னியரே என்ற எண்ணம் ராக் இசை மூலம் திட்டமிட்டு பரவப்பட்டது. ஹிட்லர் யூதர்களுக்கு எதிரான வெறுப்பை இப்படித்தான் உருவாக்கினார்.

1987-ல் அரசாங்கம் இந்த நவ நாசிஸக்காரர்களை அடையாளம் கண்டு ஒடுக்க முனைந்தது. 1989-ல் இணைந்த ஜெர்மனி உருவாக்கிய சாம்ராஜ்யக்கனவு இவர்கள் மீதான அனுதாபமாக மாறியது; இவர்களுடைய வெறியும் குற்றங்களும் மன்னிக்கப்படுகின்றன. 1990 நவம்பர் 20-ல் 50 பேர் கொண்ட ஒரு மழித்த மண்டையர் குழு 'அங்கோலன் அன்டானியோ அமெடியூ' என்ற ஆப்ரிக்கரை Eberswalde என்ற இடத்தில் துரத்தித்துரத்தி நடுத்தெருவில், காவல் நிலையம் முன்புதைத்துஅடித்துக்கொன்றது. 1991 செப்டம்பரில் இவர்கள் Hoyersw Erde என்ற இடத்திலிருந்த அகதிகள் முகாமை எரித்தனர். இவை இரண்டு உதாரணங்கள். இரண்டிலும் அரசும் நிர்வாகமும் தலையிடவேஇல்லை. இப்போக்கு வேகமாக வளர்ந்து வருகிறது பொதுமக்கள் இவற்றிற்கு ஆதரவு தருகிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன: 1991 ஆம் ஆண்டில் Dresde என்ற ஊரில் மொசாம்பிக் நாட்டவரான ஜார்ஜ் ஹோமொண்டே என்பவர் டிராம் பாதையில் தள்ளப்பட்டு கொல்லப்பட்டார். எந்தப் பயணியும்தடுக்க முன்வரவில்லை 1992இல் ஓயர்ஸ்வெர்தா, ரோஸ்டோக் ஆகிய ஊர்களில் நடந்த வன்முறைகளை பொதுமக்கள் கைதட்டி ஊக்குவித்தனர். 1991இல் மேற்கு ஜெர்மனியில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பொன்று, அங்குள்ள மக்களில்- மூன்றிலொரு பங்கினர் நிறவெறியை முழுமையாக ஏற்கிறார்கள் என்று காட்டுகிறது;

ஜெர்மனி இரண்டாம் உலகப்போருக்கு பிறகு குற்றவாளியாக மனிதகுலத்தின் முன் நிற்கநேரிட்டது. அந்ததேசமே கடுமையான குற்ற உணர்வு கொண்டு வெட்கி நாணியது. அதற்குப் பிராயச்சித்தமாக தங்கள் குடியேற்றக் கொள்கைகளைத் தளர்த்திக் கொண்டனர் அவர்கள். உலகமெங்கும் இருந்து புகலிடமற்றவர்கள் அங்கு வந்து குடியேறநேரிட்டது இப்படித்தான் இன்று அவர்கள் ஜெர்மனிய குடியுரிமை பெற்ற தனிவர்க்கம், அவர்களை மீண்டும்உயிர்த்தெழுந்தநாஸிஸம் இம் முறைக்கான களப்பலிகளாக்க முயல்கிறது என்பதே உண்மை. இவர்களில் கணிசமான அளவு தமிழர்களும் உண்டு;

ஹிட்லரின் எழுச்சிக்கான காரணங்களில் மக்களின் இயல்பான வெறியை அவன் திட்டமிட்டு வளர்த்தது ஒரு காரணம் என்றால், அவனுக்கு எதிரான சக்திகள் அவனை அலட்சியம் செய்து தங்களுக்குள் போராடி, வலிமை இழந்து போனது இன்னொரு காரணம்- இம்முறையாவது உலகம் ஜாக்கிரதையாக இருக்குமா? இனியொரு உலகப் போரைத் தாங்கும் வலிமை பூமிக்கு இல்லை;

நன்றி. சுபமங்களா

# ஈர்ப்பு விசையில்லா விண்வெளியில் பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்கள்

ஒரு விண்வெளிப் பயணத்தின்போது முகம் கொடுக்க வேண்டி வரும் மிக சிரமமானதும் முக்கியமானதுமான சூழ்நிலை பாரமற்றநிலையாகும்- அங்கு ஈர்ப்புககவர்ச்சி இல்லாமையால் பொருட்கள் அனைத்தும் பாரம் அற்றுப் போய் அந்தரத்தில் மிதக்கும்- விண்வெளிப் பயணிகளின் நிலையும் அதேதான்- அவர்களது உடலும் பாரமற்றுப்போய் அந்தரத்தில் மிதக்கும்- பாரமற்ற நிலை என்பது பாரமான நிலையிலும் கடினமானது என்பது அக்காலத்திலேயே உணரப்பட்டது-

இத்தகைய பாரமற்ற நிலை குறுகிய வேளைக்கு மட்டுமே நீடித்தால் அதன் விளைவாக பெரும் பாதிப்புகள் ஏதும் ஏற்படாது என்றும் அதற்கு மாறாக பாரமற்ற நிலையில் நீண்ட காலத்திற்கு வாசம்செய்தால் உடலின் செயற்பாடு பாதிக்கப்பட்டு அதன் விளைவாக உடல் நலம் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாக வேண்டிவரும் என்றும் அக்காலத்தில் நம்பப்பட்டது-

இந்த நம்பிக்கைக்கு ஏதாவது விஞ்ஞான ரீதியான அடிப்படை உண்டா என்று அறிய நல்ல சுகதேகிகளை நீண்ட காலம் படுக்கையில் ஓய்வெடுக்க வைத்தனர் மருத்துவ விஞ்ஞானிகள். அதன்பின் அவர்களது உடலை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கியபோது பல தீயவிளைவுகள் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது-

அவர்களது உடல் வெளுத்து, அடிக்கடி மயக்கமும் ஏற்பட்டது- அவர்கள் எழுந்து நடமாடிய போது அவர்களின் கால்களில் வீக்கம் ஏற்பட்டது- ஓய்வும் பரிசோதனைகளின் போது அவர்களது இருதயங்கள் செயற்படும் வகையும் அளவும் கூடத் தணிந்து ஒருமந்த நிலையை அடைந்துவிடுகின்றன- அவர்கள் பழைய படி சுறுசுறுப்பான வாழ்க்கை முறைக்கு மீண்டதும் அதற்கு ஏற்ற துரிதத்துடன் இயக்குவதற்கு திடீரென்று தன்னை மாற்றிக் கொள்ள முடியாமல் இருதயம் திணறியது தெரியவந்தது-

ஓய்வு காலத்தில் சிறுநீரகங்களின் செயற்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அதன் விளைவாக வழக்கத்திற்கு அதிகமாக சிறுநீர் கழித்ததும் கண்டுபிடிக்கப்பட்டது- இத்தகைய மாற்றங்கள் பற்பல வாரக்கணக்கில், மாதக்கணக்கில் நீடிக்கும் விண்வெளிப் பயணங்களின் போதும் ஏற்படலாம். என மருத்துவ விஞ்ஞானிகள் முடிவுக்கு வந்தனர்-

விண்வெளியின் பாரமற்ற சூழ்நிலையில் வசித்த பின்னர் பூமி திரும்புகையில் பூமியின் ஈர்ப்பு விசை வலயத்தினுள் நுழையும்போது பூமியிலிருந்து புறப்படும்போது செயற்பட்ட விசைகள் மறுபடியும் செயற்பட ஆரம்பிக்கின்றன- நீடித்த காலத்திற்கு பாரமற்ற நிலையின் பாதிப்புகளுக்கு ஆளான ஒரு பிரயாணியின் இரத்தமண்டலத்திற்கும் எலும்புகளுக்கும் இந்த விசைகளைத்தாங்கும் சக்தி இல்லாமல் போயிருக்கலாம்- மயக்கம், இருதய பலவீனம் அல்லது சக்தி இழப்பு ஏற்படலாம் என தெரிய வந்தது-

# தாயும் மகளும் கத்தியால் குத்திக்கொலை

(கொழும்பு)

கர்ப்பிணிப் பெண்ணும் அவரது தாயாரும் கொழும்பில் கத்தியால்குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த இரு கொலைகளுக்கும் தாமே பொறுப்பு என கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் கணவர் சிவகுமார் என்பவர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

நிம்மி நிர்மலா என்ற 25 வயதான 4 மாத கர்ப்பிணிப் பெண் கொழும்பு சென்றல் வீதியில் உள்ள அவரது வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது, கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டதாகவும், இதனையடுத்து கொலையாளி கிராண்ட்பாஸ் பிரிட்டோபாபா புள்ளே பிளேஸில் வசித்த அந்த கொலையுண்ட பெண்ணின் தாயான ராஜசுந்தரி (55) என்பவரின் வீட்டிற்கு சென்று அவரையும் குத்தி கொலை செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

குடும்பச் சச்சரவே இக் கொலைக்குக்காரணம் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்

ரெலிகொம் சர்வதேச

# பரிவர்த்தனை நிலையம் மின்னல் தாக்கிச் சேதம்

நேற்றுக்காலை ஏற்பட்ட மின்னல் தாக்குதலினால் சிறிலங்கா ரெலிகொம் இன் சர்வதேச பரிவர்த்தனை நிலையம் சேதமடைந்தது. இதனால் சில நாடுகளுக்கான தொலைபேசி தொடர்புகள் தடைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் வழமையான சர்வதேச தொலைபேசி தொடர்பை மீண்டும் வழங்க எவ்வளவு மணிநேரம் எடுக்குமென உடனடியாகக் கூறமுடியாதென இந்நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்தார்

# புதிய கப்பல் சேவை மாத இறுதியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையிலான புதிய கப்பல்சேவை யொன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்புதிய பயணிகள் கப்பல் சேவை மாதத்தில் நான்கு தடவை என்ற அடிப்படையில் திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இக்கப்பல் சேவை இம்மாதம் 31ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்குவந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அன்றையதினமே பயணிகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் திருமலைக்குச் செல்லும் என்றும் கூறப்படுகிறது.

இப்பயணிகள் கப்பல் சேவையை நடாத்துவதற்கு வசதியாக சிங்கப்பூரில் இருந்து புதிய பயணிகள் கப்பல் ஒன்று தருவிக்கப்படவுள்ளது. இக்கப்பல் சேவையை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மேற்கொண்டு வருகிறது.

(க,பா)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ். கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1:30 மணிக்கு அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெற இருக்கிறது. இதற்குப் பிரதம விருந்தினராக யாழ். நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. புவேந்திரன் கலந்துகொள்ள இருக்கிறார்.

° ° °

யா/ மிருசுவில் அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று இடம்பெறும். பாடசாலை அதிபர் திரு. சி. சின்னராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்ச்சிக்கு சாவகச்சேரி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

(86)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1290

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

42-969, 24-5069, 28-0159, 24-8631, 26-5281, 24-7327, 26-5808, 24-0336, 28-5039.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்-:

41-8031, 41-6686, 24-2545, 24-2288, 27-2056, 42-3419, 24-6646, 42-6452, 27-7822, 26-4809, 22-6691, 24-4726, 28-3667, 41-9480, 42-3615, 24-5461, 24-6280, 26-0483, 27-9492, 26-4139, 24-7941, 24-1250, 41-8557, 28-1686, 41-9663, 24-7321.

### 17-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1306

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-3576, 27-6821, 22-9193, 26-4376, 24-6211, 27-9033, 27-4859.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

42-3368, 26-3518, 26-2573, 41-7865, 26-1495, 26-5517, 26-6264, 26-6461, 24-8024.

# நாட்டைப் பிரித்துக் கொடுத்தால் பிரச்சினை ஒரே நாளில் தீர்ந்துவிடும்

## அதற்குத் தயாரில்லை என்கிறார் விஜேதுங்கா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஒரே தினத்தில் தீர்வு காண முடியும், நாட்டின் ஒரு பகுதியை பிரித்துக் கொடுத்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும். அதற்கு நான் தயாராக இல்லை, நான் இருக்கும்வரை அது நடைபெறாது.

இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்திருக்கின்றார்.

காலி மாவட்டத்தில் அக்மீமனையில் ஞாயிறன்று நடைபெற்ற ஐ. தே. கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது, சில அரசியல் கட்சிகள் நினைப்பது போல நாட்டை இரண்டு, மூன்று துண்டுகளாக்கி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாம் தயாரில்லை எதிர்காலச் சந்ததியினர் உரிமைகளைப் பெறுவதற்கான பாதுகாப்புக்களை வழங்கித்தான் பிரச்சினைக்கு தீர்வுகாண்போம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமக்கு அதிகாரம் கிடைத்தால், ஆறு மாத காலத்தினுள் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக தெற்கில் பிரசாரம் செய்து வருகின்றனர்,

அது வெறும் வார்த்தைகள்தான். தெற்கில் உள்ள புத்திசாலிகள் அந்த வார்த்தைகளுக்கு ஒரு போதும் ஏமாறமாட்டார்கள்.

நமது அரசு நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாத்துக் கொண்டு அதே வேளையில் தேசிய அபிவிருத்திகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது

மக்களின் பிரச்சினைகள் பலவற்றிற்கு ஐ. தே. க. அரசு தீர்வு கண்டுள்ளது. தற்போது வடக்கு - கிழக்கு பிரச்சினையைத்தான் தீர்த்து வைக்க வேண்டியுள்ளது,

இவற்றைத் தீர்ப்பதற்காக பேச்சு வார்த்தைகளை நடத்துவதும் நாங்கள் மாத்திரமே தான்-

புலிகளுக்கு நாம் பயமில்லை ஆனால் புலிகளின் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்போம் எனறு குறிப்பிட்டார்.

இதே தினம் பெலியத்த என்ற இடத்தில்இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதிபேசும்போது,

வடக்கு-கிழக்கு ஆகிய இரு மாகாணங்களும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்ற சித்தாந்தத்தை ஒழித்து, பயங்கரவாதத்தை வடக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தி திடீர் சிகிச்சையொன்றின் மூலம் பயங்கரவாதம் என்ற நோயை முற்றாகச் சுகப்படுத்த நான் எண்ணியுள்ளேன்,

புலிகள் நாட்டின் ஒரு பகுதியைக் கேட்கின்றனர். அவர்கள் ஈழம் கோருகின்றனர். இந்த ஜென்மத்தில் ஈழம் வழங்கப்படமாட்டாது.

தென்னிலங்கை எமது நாட்டையும் இனத்தையும் காப்பாற்றி வீரர்களைப் பெற்றெடுத்த பூமி அக்காலத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டையும், சுயாதீனத்தையும் காக்க எமது முன்னோர் பாடுபட்டனர்.

இந்த நாடு எதிர்நோக்கும் அச்சுறுத்தலைப் பூண்டோடு ஒழித்துவிட்டு இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒன்றிணைந்த இலங்கையை ஒப்படைப்பேன் என்ற செய்தியை சந்தோஷத்துடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்,

இந்த மாகாணசபைத் தேர்தல் மூலம் அரசாங்கத்தை மாற்றவோ கவிழ்க்கவோ முடியாது, மத்திய அரசின் கொள்கையின்படி பணம் ஒதுக்கப்பட்ட அளவுக்கே இந்த மாகாணசபை இயங்கும்,

ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுக்கு எதிராக நேரடியாக களத்தில் குதித்துள்ளது. வேறு எந்தக் கட்சியும் புலிகளைப் பற்றி எதுவும் கூறவில்லை என்றுகுறிப்பிட்டார்.

# நினைவஞ்சலி நிகழ்வு

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலி எதிர்வரும் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# புகையிரத ஊழியர் ஒய்வூதியம்

(கொழும்பு)

புகையிரத சேவை ஊழியர்களின் ஒய்வூதியம் பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன.

கொழும்பு, காலி, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் புகையிரத ஊழியர்களின் ஒய்வூதியம் வழங்கும் வேலைகள் வங்கிகளிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன,

## இலங்கை

இந்நிலையில் இந்தியா இவற்றைக் கருத்திற்கொண்டு புதிதாக ஒரு வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும்- இக் கொள்கையானது டி- பி- விஜேதுங்காவின் கொள்கையினால் இலங்கையில் பாதிக்கப்பட்டு வரும் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு இலங்கைவிவகாரங்கள் இந்திய அரசியலைப் பாதிக்காதவாறும் பிரதேச நலனை பாதிக்காதவாறும் அமைய வேண்டும்என்பதே டிக்சிற்றின் நோக்கமாகும்- அதாவது டி- பி- விஜேதுங்காவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை இந்திய நலன் பாதுகாக்கப்படுவதாகவும் சிறிலங்காவின் அரசியலில் இந்தியாவின் பிடி உறுதியாக இருக்க வேண்டும் என்பதோடு தனிநாடு என்ற நிலைக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் செல்வது தடுக்கப்பட வேண்டும் என்பதுமே டிக்சிற்றின் புதிய கொள்கையின் வடிவமாகும்-

# தமிழகசட்டசபையில் அடிதடி எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று முன்னாள் அமைச்சரும் எக்கட்சியையும் சாராத வருமான வி. வில்வநாதன், சுயேச்சை உறுப்பினர் தாமரைக்கனியால் தாக்கப்பட்டார். இந்தச்சம்பவம் பற்றி கருத்துக்கூற பேரவைத் தலைவர் வாக்கு அளிக்காததையடுத்து பெரும்பாலான எதிர்க்கட்சிகள் நேற்று வெளிநடப்புச் செய்தன,

சட்டப்பேரவையில் ஏற்பட்ட சிறு வாக்குவாதத்தை அடுத்து பேரவை உறுப்பினர்கள் சட்டப் பேரவைக்குள் அங்குமிங்கும் ஓடியதாகவும் அச் சந்தர்ப்பத்தில் வி. வில்வநாதன், தாமரைக்கனியால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சபையில் எந்தவொரு உறுப்பினரும் தாக்கப்படவில்லை என சபைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா கூறியபோது காங்கிரஸ் உறுப்பினர் கூச்சல் எழுப்பினர். அதனையடுத்து அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடம்

# உணவு பொருள் அனுமதி விண்ணப்பங்கள் தேக்கம்

யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருட்களை எடுத்துவருவது தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக பததரப்பினரிடையே இருந்து அனுப்பப்பட்ட பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவிடம் தேக்கம் அடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட புதிய மாற்றத்தைத் தொடர்ந்து இவ்வாறு விண்ணப்பங்கள் தேக்கம் அடைந்துள்ளதால் பல அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்கள அரசசார்பு உத்தியோகத்தர்கள், தனியார் வர்த்தகர் பலர் தொடர்ந்து பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவினரின் அலுவலகத்தில் காணக்கூடியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## கண்டெடுப்பு

மூத்த விநாயகர் வீதி நல்லூரைச் சேர்ந்த பொ. குகனேசன் என்பவர் யாழ் மாநகரசபைக்கு முன்பாக வீதியில் கிடந்த ஒரு தொகைப்பணத்தை எடுத்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். தவறவிட்டவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## முப்படை

[illegible] ஜெயமகா ஆகியோருக்கும்,

விமானப்படையைச் சேர்ந்த விமானப்படைத்தளபதி ஏயார் மார்சல் ஒலிவர் ரணசிங்க, ஓய்வு பெற்ற ஏயார் வைஸ் மார்சல் ரி. எம். பர்னாண்டோ, ஓய்வு பெற்ற ஏயார் கொமடோர் ஏ. வி. சமரக்கோன் ஆகியோர் இவ் விருதுகளை பெற்றனர்.

## யாழ்

சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டது. இந்தப் போராட்டம் கடந்த வாரம்நடைபெற்றது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே யாழ் பல்கலைக்கழக மாணவர் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்:

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மருத்துவ பீட மாணவரின் கற்கைநெறி காலம் முடியும்வரை மகாபொல கொடுப்பனவுவழங்கல் மகாபொல கொடுப்பனவு பெறும் மாணவரது பெற்றோரின் வருமான எல்லையை 48,000 ரூபாவிலிருந்து 84,000 ரூபாவாக உயர்த்தப்படல் என்பவற்றையும் கோரிக்கைகளாக முன்வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

# யாழ் பல்கலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்


### மகாபொல இரட்டிப்பாகாததற்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் இன்று விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்ட கோரிக்கையான யாழ்; பல்கலைக்கழக மாணவரது மகாபொல உதவிப் பணக் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்குதலை நடைமுறைப் படுத்தாமையைக் கண்டித்து, அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் எல்லாப்பல்கலைக்கழகங்களிலும் சுவரொட்டி மற்றும்

(11ஆம் பக்கம் பார்க்க)




# சுய தொழில்உற்பத்திக்கடன் வழங்குதல் தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட சுயதொழில் உற்பத்தி முயற்சிக் கடன் வழங்கல் மேலும் தாமதமாகுமென அதன் யாழ் முகாமையாளர் திரு; கணேசமூர்த்தி தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவிக்கையில் சகல மாவட்டங்களில் இருந்தும் விபரங்கள் கிடைக்கப்பெற்றதன் பிற்பாடே மேற்படி கடன் வழங்க இலங்கை வங்கியின் இயக்குனர் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்;

அத்துடன் வேறு கடன்கள் எதுவும் வழங்கக் கூடிய சூழ்நிலை இங்கு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்; (பா),(தி)

# க. பொ. த. (உ) பரீட்சை விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க; பொ- த. உயர்தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது;

பாடசாலைப் பரீட்சார்த்திகள் பாடசாலையூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத்திணைக்களத்திற்கு'பரீட்சை திணைக்களம், தரவுக்கிளை, கொழும்பு -2 என்கின்ற முகவரியிட்டு அனுப்பி வைக்கவேண்டும்.

மேலும் இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி பாடசாலைகளுக்கு ஏப்பிரல் மாதம் 8ஆம் திகதி ஆகும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி பற்றி அறிவிக்கப்படவில்லை; (யா)

# ஆலோசனை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் ஆக்க இலக்கியம் என்னும் பொருள் பற்றி இன்று பகல் 10 மணிக்கு ஆலோசனைக் கூட்டம்ஒன்று புவியியற் துறை கருத்தரங்கு அறையில்நடைபெறவுள்ளது;

இக் கருத்தரங்கை யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு ஒழுங்கு செய்துள்ளது. மேற்படி பொருள் பற்றிய பொது விரிவுரைத் தொடர் பிரதி சனிக்கிழமை தோறும் கைலாசபதி கலை அரங்கில் விரைவில் தொடங்கவுள்ளது எனத் தெரியவருகிறது.

# பதவி துறக்கும் அஷ்ரப் முடிவில் மாற்றம் எதுவும் இராது

### முஸ்லிம் காங்கிரஸ் துணைத்தலைவர்

(கொழும்பு)

எதிர்ப்புகள் குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கொடுத்த வாக்கை நிறைவேற்ற தமது எம், பி, பதவியை ஏப்ரலில் ராஜினாமா செய்தே தீருவார் என முஸ்லிம் காங்கிரசின் துணைத்தலைவரானமருதூர்க்கனி தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசில் தற்போது இல்லாத முன்னாள் தவிசாளர் சேகு இஸ்ஸத்தீன் எம், பியாக வருவதற்கு இடமளிப்பதாக எனது ராஜினாமா அமையாது என எம், எச் எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார், முஸ்லிம் காங்கிரசிற்கு எதிராகச் செயல்பட்டு புதுக்கட்சி ஆரம்பித்து தேர்தலில் எனக்கும் கட்சிக்கும் விரோதமாக பிரசாரம் செய்த சேகு இஸ்ஸத்தின் முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலின்படி எம்; பியாக வர இடமளிக்கும் விதத்தில் நான்ராஜினாமா செய்யமாட்டேன் என அஷ்ரப் மேலும் தெரிவித்தார்,

உள்ளுராட்சித்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தோல்வி கண்டதையடுத்துஅஷ்ரப்முன்னர் உறுதியளித்தவாறுதமது பதவியை ராஜினாமா செய்ய இருப்பதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## திருத்தம்

விளையாட்டுவிழா-1994 மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டி(ஆண்கள்)பிரதேச செயலகம், கரவெட்டி

மேற்படி விழா தொடர்பாக 94-03-12 அன்றைய ஈழநாதம் பத்திரிகையில் வந்த விளம்பரத்தில் விண்ணப்ப முடிவு திகதி 1994-03-90 என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது 1994.03.20 என்பதே சரியான திகதி ஆகும்;

# மதிப்பிடும் வேலை ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வரும் மூன்றாவது வதிவிட வேளாண்மைப் போட்டியின் முதலாம் கட்ட பார்வையிடல் இம் மாதம் பத்தாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது; போட்டியாளரின் வதிவிடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு மதிப்பீடு வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# வட கிழக்கு யுத்தத்திற்கு முடிவு காணப்படவேண்டும்

### எதிர்க்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் யுத்தத்திற்குஒருமுடிவு காணப்பட வேண்டுமென்றும் எவ்வித அர்த்தமும் இல்லாத யுத்தம்தொடர்வது வேதனைக்குரியது என்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

நடைபெறும் யுத்தத்திற்காகச் செலவிடப்படும் 2500 கோடி ரூபாவுக்கு எவ்வித கணக்குகளும் காட்டப்படுவதில்லையெனவும் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்

தீவுப்பகுதி

பட்டதாகவும் காயமுற்றவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று பாதுகாப்பு வட்டாரத்தினை மேற்கோள் காட்டி எழுதியுள்ளது;

கற்பிட்டி

லேயே இவர்கள் கொல்லப்பட்டதாகவும் மேலும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது;

ஜேர்மனி

எரிவதைக் கண்டு அதனை அணைக்க நடவடிக்கை மேற்கொண்டது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்;

ஜேர்மனியில் வெளிநாட்டவருக்கு எதிராக நிறவெறியாளர்கள் தீவைக்கும் நிகழ்ச்சிகள் பல இடம் பெற்று வருகின்றன வெளிநாட்டவர் தங்கியிருக்கும் விடுதிகளுக்கும் வீடுகளுக்கும் தீவைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது;

புதுவருட

என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தவிஜயம் தொடர்பான இறுதி ஏற்பாடுகளை வகுக்குமுகமாக பிக்குமாரின் கூட்டம் ஒன்று ஏப்ரல் 11 ஆம் திகதி கொழும்பு விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் இடம் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல.நோக்கு.கூ; சங்கங்களில் விலைகள் வேறுபாடு

அருகருகேயுள்ள இரண்டு வேறுபட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்களின் விலைகளில் அதிக வித்தியாசங்கள் காணப்படுகின்றன;

சமரபாகுவில் உடுப்பிட்டி கிளையும் அதனருகில் 150 யார் தொலைவில் வீரபத்திரர் கோவிலடியில் பருத்தித்துறைக்கான கிளையும் செயற்பட்டு வருகிறது, பருத்தித்துறை கிளையில் சில பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளது;

குறிப்பாக உடுப்பிட்டிக் கிளையில் ரவை கிலோ 36 ரூபாவாக விற்பனை செய்யப்படும் போது அருகில் உள்ள பருத்தித்துறை கிளையில் 42 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது, அதே போன்று கச்சான் கிலோ உடுப்பிட்டிக் கிளையில் 36 ரூபாவாக உள்ள போது பருத்தித்துறை கிளையில் 42 ரூபாவாக உள்ளது; லக்ஸ்பிறே பால் மாவைபக்கற்றின் விலையும் பருத்தித்துறை கிளை 6 ரூபா அதிகரித்து விற்பனை செய்கிறது

அருகருகே உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வாறாக விற்பனை செய்யப்படுவதாக் பருத்தித்துறை கிளையில் பொருள்களை வாங்குவோர் விசனம் அடைகின்றனர் (யோ)

கொழும்பில்

னையிடப்பட்டது போலவே வாகனத்திற்குள் இருக்கும் பொதிகளும் சோதனையிடப்பட உதவுங்கள்-

கடமையில் ஈடுபட்டுள்ள குழுவினர் ஏதேனும் ஒரு ஆவணம், அல்லது எவரேனும் ஒருவர் மீது சந்தேகங்கொண்டால் தேவைக்கேற்ப மேலும் விசாரிக்கவும் பரிசோதனை செய்வதற்காகவும் வாகனத்தின் சாரதி அல்லது வாகனத்தில் இருப்பவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள்-

இப்படி தடுத்து வைக்கப்படுவோர் தொடர்பாக இராணுவ தலைமையகத்திலுள்ள 12ஆம் படை பிரிவினரும் பொலிசாரும் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்வார்கள்;

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகம் அறிவுறுத்தியுள்ளது.


# மரண அறிவித்தல்

## திரு. கதிர்காமு கந்தையா

ஏழாலை மேற்கைச் சேர்ந்த கதிர்காமு கந்தையா (ஏழாலை கிராமசபை முன்னாள் உபதலைவர்) நேற்று 17-03-94 இல் காலமானார். இவர் பூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிர்காமு, தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லப்பா, செல்லமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் உமாதேவி, இராசகுமாரி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை), மகாதேவன் (சுன்னாகம் ப.நோ.கூ;ச), பவளராணி, (ஜேர்மன்), இலங்கநாதன் (சுவிஸ்), பத்மநாதன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர், நடேஸ்வராக் கல்லூரி), சிவலிங்கம் (உற்பத்தி முகாமையாளர், யாழ் பு; நெ; கூ; சங்கம், கோண்டாவில்), இரஞ்சினிதேவி (கணக்குப் பதிவாளர், சுன்னாகம் ப;நோ.கூ.சங்கம்), சிவநாதன் (ஜேர்மன்), வளர்மதி (சுவிஸ்), ராணி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கனகராசா லவதேவி (ஆசிரியை, ஏழாலை மகாவித்தியாலயம்), உமாகரன்(சுவிஸ்), ஜானகி(இராமநாதன் நுண்கலைப் பிரிவு), வாசுகி(தொழில்நுட்பக் கல்லூரி), சுதாகரன் (யாழ் இந்துக்கல்லூரி), ஜனனி (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வகரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), சசிபாரதி, மயூரி (ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை), மதுரா, நிசாந்தி (ஜேர்மன்), பிரதீப் (ஜேர்மன்), அசோக் (ஜேர்மன்), திசோக் (ஜேர்மன்), வினோத் (சுவிஸ்), வினோதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும் செல்லையா, காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனுமாவார் அன்னாரின் பூதவுடல் (18-3-94) இன்றுகாலை 11மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்;

தகவல்;

க. மயூரன்

தேவி தோட்டம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்; (7790)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.